கட்டிடங்கள் துறை

வருடாந்திர செயல்திறன் அறிக்கை – 2024

நகர்ப்புற வளர்ச்சி, கட்டுமானம் மற்றும் வீட்டுவசதி அமைச்சகம்

2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கை

நிறுவனத்தின் பெயர் : **கட்டிடங்கள் திணைக்களம்**
செலவினத் தலைப்பு இல. : 309

உள்ளடக்கம்

அத்தியாயம் 01 - நிறுவன விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு.. 2

1.1 அறிமுகம்.. 2

1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, செயற்பணி, குறிக்கோள்கள்.. 6

1.3 பிரதான செயற்பாடுகள்.. 10

1.4 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்.. 11

1.5 அமைச்சு/திணைக்களம்/மாகாண சபை இன் கீழ் வருகின்ற நிறுவனங்கள்/நிதி.. 12

அத்தியாயம் 02 – செயல் முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம் 13

2.1 கடந்தகால செயலாற்றல் 2024 வரை.. 13

2.2 2024 ஆம் ஆண்டிற்கான செயற்திட்டங்களின் சுருக்கம்.. 15

2.3 ஆலோசனைப் பிரிவின் செயலாற்றல்.. 17

2.4 புலமைச்சொத்து செயற்திட்டங்களின் சான்றுறுதிப்படுத்தல்.. 18

அத்தியாயம் 03 – 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஒட்டுமொத்தநிதி செயலாற்றல்... 19

3.1 நிதி செயலாற்றல் கூற்று.. 19

3.2 நிதி நிலைமை கூற்று.. 20

3.3 காசுப் பாய்ச்சல் கூற்று.. 21

3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்.. 22

1. அறிக்கையிடல் காலம்.. 22
2. அளவீட்டின் அடிப்படை.. 22
3. வருமான அங்கீகாரம்.. 22
4. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் (ீருநு) அங்கீகாரம் மற்றும் அளவீடு.. 22
5. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ஒதுக்கம்.. 22
6. காசு மற்றும் காசுக்கு சமமானவை.. 22

3.5 வருமான சேகரிப்பின் செயலாற்றல்.. 23

3.6 ஒதுக்கீட்டின் பயன்பாட்டின் செயலாற்றல்.. 23

3.6 அறி.பி. 208 இன் பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவர் என்ற வகையில் மாவட்டச் செயலகம்/ மாகாண சபைக்கு செலவிடுவதற்காக இந்த திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள்..... 24

3.7 நிதியல்லாத சொத்துகளின் அறிக்கையிடல் செயலாற்றல்.. 25

3.8 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை **.. 26

அத்தியாயம் 04 – செயலாற்றல் குறிகாட்டிகள்.. 37

அத்தியாயம் 05 - நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (ளுனுபு) அடைதலின் செயலாற்றல்... 38

அத்தியாயம் 06 - மனித வள விவரக்குறிப்பு.. 39

6.1 ஆளணி முகாமைத்துவம்.. 39

6.2 ** மனித வளங்களின் பற்றாக்குறை அல்லது மிகையானது நிறுவனத்தின் செயலாற்றலை பாதித்துள்ளமையை சுருக்கமாகக் குறிப்பிடுதல்.. 39

6.3 மனித வள முகாமைத்துவம்.. 40

அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை.. 43

அத்தியாயம் 01 - நிறுவன விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு

1.1 அறிமுகம்

பொதுப் பணிகள் திணைக்களத்தின் (PWD) கீழ் செயல்பட்டிருந்த கட்டிடத் திணைக்களம் (DOB) 1969 இல் நிறுவப்பட்டதுடன் கட்டிடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்குப் பொறுப்பான ஒரு சுயாதீன நிறுவனமாக 5 தசாப்தங்களுக்கும் மேலாக இயங்கி வருகின்றது. இந்த திணைக்களமானது கட்டிடம் மற்றும் அது தொடர்பான உட்கட்டமைப்புப் பணிகளில் செயற்படுகின்ற ஒரேயொறு அதிகாரம் மற்றும் ஆலோசனை நிறுவனமாக காணப்படுகின்றது. கட்டிட நிகழ்ச்சித்திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் கட்டிட நிகழ்ச்சித் திட்டங்களின் எந்தவொரு கடப்பாடும் பற்றிய நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்குவதற்கான ஓர் நிறுவனமாக இது அழைக்கப்பட்டது.

திணைக்களத்தின் பணிகள் நிதி பிரமாணங்கள், திறைசேரிச் சுற்றறிக்கைகள் மற்றும் வர்த்தமானி அறிவித்தல் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன. தேசிய அபிவிருத்தியிலும், பொது கட்டிட சொத்துக்களைப் பாதுகாப்பதிலும் இத்திணைக்களம் பாராட்டத்தக்க பங்கை வகிக்கின்றது.

அரசியலமைப்பின் 13 வது திருத்தத்துடன் இத்திணைக்களம் மறுசீரமைக்கப்பட்டது. இலங்கையில் பொது கட்டிடங்களின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணத்திற்கான அதிகாரமும் பொறுப்பும் இத்திணைக்களத்திற்கு உள்ளது. திணைக்களமானது செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப பொறுப்புக்கூறல் பற்றிய அதன் பங்கை மீளவரையறை செய்துள்ளது.

நிறைவேற்றுப் பொழிப்பு

இலங்கையில் அரசாங்க கட்டிடங்களை வடிவமைத்தல் மற்றும் நிர்மாணித்தல் ஆகியவற்றிற்கு பொறுப்பான முன்னணி அரசாங்க நிறுவனமாக 5 தசாப்தங்களுக்கும் மேலாக கட்டிடங்கள் திணைக்களம் செயற்பட்டு வருகின்றது. தற்போது, மாறிவருகின்ற பொருளாதார மற்றும் தொழில்நுட்பத்திற்கு ஏற்றவாறு உருவாக்கப்பட்ட அரச திணைக்களங்களில் ஒன்றாக மாறுவதில் எங்கள் நிறுவனம் வெற்றி பெற்றுள்ளது. செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப சேவைகளில் கவனம் செலுத்துவதன் மூலம் திணைக்களம் அதன் பொறுப்புகள் மற்றும் செயற்பணி அறிக்கையை வியாக்கியாணம் செய்துள்ளது.

மேம்படுத்தப்பட்ட செயலாற்றல், கண்காணிப்பு, கட்டுப்படுத்துதல் மற்றும் பணியாளர்களை மதிப்பாய்வு செய்தல், இணக்கத்தை நிரூபித்தல், வெளிப்புற அறிக்கைகளைத் தயாரித்தல், செயல்திறனை மேம்படுத்துதல் மற்றும் பொறியாளர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு இடையேயான தொடர்பை மேம்படுத்துதல் போன்ற நோக்கங்களுடன் இந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

கடந்த கால செயலாற்றலுடன் ஒப்பிடும் போது இந்த ஆண்டின் செயலாற்றலானது மதிப்பீடு செய்யப்பட வேண்டிய அளவில் உள்ளது. 7 பிராந்தியங்களிலும் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் பொழிப்பாக்கப்பட்டுள்ளன. மீண்டுவரும் செலவுகள் மற்றும் மூலதனச் செலவினங்களின் சுருக்கமானது பிற ஒத்த நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில், வெளியீட்டுச் செலவு குறைந்ததாகவும் திறமையாகவும் இருப்பதைக் காட்டுகிறது.

வருடாந்த செயல்திட்டத்தின் நிகழ்ச்சிட்டங்களின் செயலாற்றலானது ஒப்பந்த காலத்திற்கான அதன் இலக்குகளுடன் ஒப்பிட்டு அடையப்பட்ட செயன்முன்னேற்றம் மற்றும் பணியின் தரத்தை மேம்படுத்த மதிப்பாய்வு செய்யப்படுகிறது. திணைக்களத்தின் ஊழியர்கள், பல்வேறு வல்லுநர்களைக் கொண்டு காணப்படுவதுடன் கிடைக்கக்கூடிய வளங்களை உகந்த முறையில் பயன்படுத்துவதன் மூலம் உயர் சேவைகளை வழங்குகிறார்கள். திணைக்களத்தின் இலக்குகளை அதிகபட்ச செயல்திறனுடன் அடைய தேவையான எண்ணிக்கையிலான பணியாளர்களில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்குத் திணைக்களம் பாடுபடுகிறது. கட்டிடத் திணைக்களத்தின் ஊழியர்களின் அறிவு பல்வேறு வெளிப்புற மற்றும் உள்ளக பயிற்சித் திட்டங்களை நடத்துவதன் மூலம் உருவாக்கப்படுகிறது. வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தின்படி உள்ளக கணக்காய்வுப் பிரிவானது நிர்வாக, நிதி மற்றும் பிற கணக்காய்வுகளை நடத்துகிறது.

தற்போதைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் திணைக்களத்தின் செயல்பாடுகளை மீள வடிவமைப்பதற்காக திணைக்களம் மீதான ஆய்வு அவசியமாக இருப்பதுடன் எதிர்காலத்தில் அரசுடன் தொடர்புடைய அனைத்து செயற்திட்டங்களையும் பொறுப்பேற்கும் இலக்கை அடைவதற்காக திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

பணிப்பாளர் நாயகத்தின் அறிக்கை

2024 நிதியாண்டிற்கான கட்டிடத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

எமது திணைக்களம், நிர்மாணத் துறையினூடாக, நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு முழுமையாகப் பங்களிப்பதோடு நாடளாவிய ரீதியிலான நிர்மாணத் திட்டங்களுக்கான செயற்திட்ட முகாமைத்துவ சேவைகளை வழங்கியுள்ளது.

நாட்டில் பொருளாதார சவால்கள் மற்றும் அரசாங்க வரவு செலவுத் திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட உள்கட்டமைப்பு மேம்பாட்டு முதலீட்டுக் கொள்கைகள் இருந்தபோதிலும், 2024 இல் கட்டிடங்கள் திணைக்களத்தின் நிதி முன்னேற்றம் இலக்கு மதிப்புடன் ஒப்பிடுகையில் 80% ஆகும்.

2024 ஆம் ஆண்டில், உள்ளக மற்றும் வெளிப்புற பயிற்சித் திட்டங்கள் மூலம் பணியாளர்களை தொடர்ந்து மேம்படுத்தினோம். பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற தொழில்நுட்ப நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு தொழில்நுட்ப பயிற்சி வாய்ப்புகளையும் நாங்கள் வழங்கினோம்.

2024 ஆண்டில் எதிர்கொண்ட தடைகள்

- பணியாளர்கள் பற்றாக்குறை: பொறியாளர்கள், தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் வடிவமைப்பாளர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள் மற்றும் ஓட்டுனர்கள் பற்றாக்குறை.
- வசதிகள் மற்றும் சலுகைகள் இல்லாததால் அரசுத் துறையில் அதிகாரிகளைத் தக்கவைப்பதில் சிரமம், அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான சம்பளமற்ற விடுமுறை சுற்றறிக்கையின் படி வெளிநாடு சென்றமையால் ஊழியர்கள் பற்றாக்குறை.
- தளத்தைப் பார்வையிடுவதற்கு வாகனங்கள் பற்றாக்குறை.
- அவசர திட்டங்களுக்கு பணி நியமனத்தின் அடிப்படையில் ஆலோசனை சேவைகளைப் பெறுவதற்கு ஒப்புதல்கள் இல்லாமை.
- சுற்றுலா விடுதிகளின் பராமரிப்பு / மேம்பாட்டிற்கு போதுமான ஒதுக்கீடுகள் இல்லாமை.
- இடைநிறுத்தப்பட்ட திட்டங்களுக்கு பணம் செலுத்தாமை (வடிவமைப்புகளை முடித்த பிறகு)
- கட்டுமான கட்டத்தில் வாடிக்கையாளர்களால் கோரப்பட்ட மாற்றங்களால் திட்டங்களில் தாமதம்.
- ஒப்பந்ததாரர்களின் வளங்கள் பற்றாக்குறை மற்றும் நிதி மற்றும் பொருள் பற்றாக்குறை காரணமாக திட்டங்களை சரியான நேரத்தில் முடிப்பதில் சிரமம்.
- வாடிக்கையாளரால் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிப்பதில் மற்றும் உள்ளூர் அரசாங்க அனுமதிகளைப் பெறுவதில் தாமதம்

தடைகளை அகற்றுவதற்கான உத்திகள்

- குறித்த வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்காக தொடர்புடைய அதிகாரத்தரப்பின் மூலம் ஆட்சேர்த்தல்.
- பதிற்கடமை மற்றும் பதில் வேலைபார்ப்பு அடிப்படையில் தற்போதுள்ள பதவியணியனரைக் கொண்டு கடமைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பொறியியலாளர்: கே.ஜீ.எஸ். குமுதினி
கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம்

<u>**முகாமைத்துவம் - பதவிநிலை**</u>

பொறி. (திருமதி) கே.ஜி.எஸ். குமுதினி	பணிப்பாளர் நாயகம்
பொறி. திருமதி ஜி.எச்.ஹிரிமுத்துகொட	மேலதிக பணிப்பாளர் நாயகம் (பொறியியல் சேவை)
கட்டிடக்கலை. திரு மேனக மங்களானந்த	மேலதிக பணிப்பாளர் நாயகம் (ஆலோசனை சேவை)
பொறி. திரு ஏ.எம். விக்ரமசிங்ஹ	பணிப்பாளர் (நிர்மாணம் - வலயம் I)
பொறி. திரு ஜீ.ஆர்.எஸ்.பி. கம்லத்	பணிப்பாளர் (நிர்மாணம் - வலயம் II)
பொறி. திரு எஸ்.எஸ்.ரண்வத்த	பணிப்பாளர் (நிர்மாணம் - வலயம் III)
பொறி. திரு எச்.ஆர்.எம். பண்டார	பணிப்பாளர் (பெறுகை மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி)
பொறி. திரு ஜீ.எச்.ஏ.பீ. சஜோத	பணிப்பாளர் (பொறியியல் வடிவமைப்பு)
பொறி. திருமதி ஈ.டி.எம்.எஸ்.குணரத்ன	பணிப்பாளர் (மின்னியல் மற்றும் இயந்திரவியல்)
திருமதி. எஸ்.டி.டி.பி. சிங்கபுர	பணிப்பாளர் (நிர்வாகம்)
திரு. அணில் கன்னங்கர	பிரதம கணக்காளர்
திரு. கே.ஜி.பி பிரியந்த	பிரதம உள்ளக கணக்காளர்
கட்டிடக்கலை. திருமதி ஆர்.எ.ரி.எஸ். ரணதுங்க	பணிப்பாளர் (கட்டிடக்கலை)

கூட்டிணைப்புத் தகவல்கள்

பெயர்	-	கட்டிடங்கள் திணைக்களம்
சட்ட ரீதியான தகுதி	-	அரசுக்கு முழு உரிமையுடையது
அமைச்சு	-	நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
அலுவலகம்	-	இரண்டாவது மாடி செத்சிறிபாய, பத்தரமுல்லை இலங்கை தொலைபேசி 94 11 2862588 தொலைநகல். 94 11 2864771 மின்னஞ்சல். info@buildingsdept.gov.lk இணையம். www.buildings.gov.lk



உரு 1 : கட்டிடங்கள் திணைக்களத்தின் தலைமை அலுவலக அமைவிடம்

வலய அலுவலகங்கள்

வலயம்	முகவரி
வலயம் 1 (மேற்கு – தெற்கு)	பிரதம பொறியியலாளரின் அலுவலகம் (வலயம் 1), கட்டிடங்கள் திணைக்களம், இல. 213, டொரிங்டன் எவன்யூ, கொழும்பு 07
வலயம் 1 (மேற்கு – வடக்கு)	பிரதம பொறியியலாளரின் அலுவலகம் (வலயம் 1), கட்டிடங்கள் திணைக்களம், இல. 213, டொரிங்டன் எவன்யூ, கொழும்பு 07
வலயம் 2	பிரதம பொறியியலாளரின் அலுவலகம் (வலயம் 2), கட்டிடங்கள் திணைக்களம், கடலோர வீதி, குருநகர், யாழ்ப்பாணம்
வலயம் 3	பிரதம பொறியியலாளரின் அலுவலகம் (வலயம் 3), கட்டிடங்கள் திணைக்களம், வில்கொடவீதி, குருணாகல்.
வலயம் 4	பிரதம பொறியியலாளரின் அலுவலகம் (வலயம் 4), கட்டிடங்கள் திணைக்களம், பனிச்சாயடி, திரைமடு மட்டக்களப்பு.
வலயம் 5	பிரதம பொறியியலாளரின் அலுவலகம் (வலயம் 5), கட்டிடங்கள் திணைக்களம், த.பெ.இல. 113, கண்டி.
வலயம் 6	பிரதம பொறியியலாளரின் அலுவலகம் (வலயம் 6), கட்டிடங்கள் திணைக்களம், இல.10, மேல் டிக்சன் வீதி, காலி.

MAP OF ZONAL OFFICES



உரு 2: வலய வரைபடம்

1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, செயற்பணி, குறிக்கோள்கள்

தூரநோக்கு

மக்களுக்கு உயர் தரமான சேவைகளை வழங்குவதை உறுதி செய்வதற்காக பாதுகாப்பான, சிக்கனமான, நிலைபேறான, நேர்த்தியான, கட்டமைக்கப்பட்ட சுற்றாடலொன்றை பொதுத்துறை நிறுவனங்களுக்கு வழங்குவதன் மூலம் கட்டிட வேலைகளில் தொழில்நுட்ப அதிகாரியாக இருத்தல்.

செயற்பணி

அர்ப்பணிப்புள்ள பல்துறை நிபுணர்களின் குழுவின் மூலம் கட்டிடக்கலை வடிவமைப்பு, பொறியியல் வடிவமைப்பு, நிர்மாணம், பராமரிப்பு, செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதன் ஊடாக ஆர்வமுள்ள தரப்பினர்களிற்கு தரம், சிக்கனம், செயல்பாட்டுடைய மற்றும் முழுமையான திருப்திக்கான தொழில்நுட்ப பொறுப்புணர்வை உறுதி செய்து தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதன் மூலம் பொதுத்துறையின் கட்டிட வேலைகளை மேம்படுத்துவதற்கு மிகச்சிறந்த சேவைகளை வழங்குதல்.

குறிக்கோள்கள்

பொதுத்துறை கட்டிட வேலைகளின் அபிவிருத்திக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள மிகச்சிறந்த சேவைகளை வழங்கும் முன்னோடி அரசாங்க அமைப்பாக திணைக்களம் காணப்படுகின்றது.

- தொழில்முறை சேவைகள் மூலம் வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்துதல்.
- சட்டரீதியான ஒழுங்குமுறை தேவைகள் மற்றும் தொடர்புடைய நியமங்களை கடைபிடித்தல்.
- கண்காணிப்பு, வாடிக்கையாளர் கருத்து மற்றும் அறிவாற்றலை புதுப்பித்தல் மூலம் எங்கள் சேவைகளை மேம்படுத்துவதில் தொடர்ந்து கவனம் செலுத்துதல்.
- பல்துறை நிபுணர்களின் ஒட்டுமொத்த பங்கேற்பை பெற்று முழுமையான பங்களிப்பை வழங்குதல்.

திணைக்களத்தின் உத்தரவாதம்

வாடிக்கையாளரின் தொழில்நுட்ப மற்றும் நிர்வாகத் திறன்களைக் கருத்தில் கொண்டு திணைக்களமானது செயல்திறன்மிக்க உதவிகளை வழங்குகின்றது. கட்டுமானங்களுக்கான உத்தரவாதத்தின் தேவையை நாங்கள் மதிப்பதுடன் இடரை குறைப்பதற்கு பின்வருமாறு பொறுப்பேற்கின்றோம் :

1. ஆயுட்கால தொழில்நுட்ப ரீதியான / நிதி ரீதியான வகைகூறல்
2. அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிபுணரால் முழுமையான கட்டிடத் தேவைக்கான வடிவமைப்புகள்
3. அனைத்து விதிகள், பிரமாணங்கள், தரம் மற்றும் பாதுகாப்பு நியமங்களை கடைபிடித்தல்
4. கடந்த கால அனுபவத்தைப் பயன்படுத்தி சிறப்பாக உருவாக்கப்பட்ட மிகவும் துல்லியமான நோக்கெல்லை
5. ஏனைய சேவை வழங்குநர்களின் தரம், பாதுகாப்பை ஆய்வு செய்தல், ஒத்துப்போகும் வடிவமைப்புகள், ஆவணம் மூலம் உறுதிப்படுத்துதல்
6. ஒப்பந்தங்களை நிர்வகித்தல்
7. அனுபவம் வாய்ந்த தொழில்சார் செயற்திட்ட முகாமைத்துவ சேவையின் விழுமியத்தை உறுதிப்படுத்துதல்
8. முகாமைத்துவ கணக்காய்வு சிக்கல்களில் உதவிசெய்தல்
9. ஒப்பந்த வழக்குகளில் உதவிசெய்தல்
10. நியம தொழில்நுட்ப மதிப்பீட்டு, தொழில்நுட்ப மதிப்பீட்டு மற்றும் பெறுகைக் குழுக்களில் பங்கேற்பதன் மூலம் தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்
11. கட்டிட நிர்மாணங்கள் மற்றும் பராமரித்தலுக்கான கட்டிட வீதங்களின் பட்டோலையை (BSR) தயாரித்து வெளியிடுதல்.

வழங்கப்படுகின்ற சேவைகள்

கட்டிடங்கள் திணைக்களத்தினால் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் அவர்களின் கட்டிடங்கள், உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளை செயல்படுத்துவதில் அவர்கள் எதிர்கொள்ளும் இயலளவு இடைவெளியை குறைப்பதற்கும் உதவி வழங்கப்படுகின்றது.

செயற்திட்ட பிரேரணைகள் (வாடிக்கையாள் செயற்திட்டங்களை அடையாளம் காண்பதற்கு உதவும் வகிபாகம்)

செயற்திட்டச் சுருக்கங்கள், சாத்தியக்கூறு அறிக்கைகள், கிரய மதிப்பீடுகள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு செயற்திட்ட அனுமதிகளையும் நிதி ஒதுக்கீடுகளையும் பெற்றுக் கொள்வதற்கான தொழில்நுட்ப உதவிகளை நாங்கள் தயார் செய்கின்றோம்.

ஆயத்த தயாரிப்பு (தொழில்முனைவு செயற்திட்ட முகாமை வகிபாகமாக இருத்தல்)

வடிவமைப்பிலிருந்து பூரணப்படுத்தி கையேற்றல் வரையிலுமான முழுப் பொறுப்பையும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். வாடிக்கையாளர் எல்லா தொழிற்பாடுகளையும் மேற்கொள்வதற்கான அனுமதியை மாத்திரம் வழங்குதல் வேண்டும்.

கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகத்திற்கு வாக்குப் பணமாக அல்லது காசோலையாக நிதிகள் மாற்றப்படுவதன் மூலம்: நிதிப்பிரமாணத்தில் கூறப்பட்டவாறு நிதிகள் திணைக்களத்திற்கு விடுவிக்கப்படுதல் வேண்டும்.

ஆலோசனை (செயற்திட்ட அமுலாக்கல் முகாமையாளரின் வகிபாகம்)

நாங்கள் சாத்தியக்கூறு ஆய்வு, வடிவமைப்பு அபிவிருத்தி, அளவுத்திட்ட சிட்டைகள் மற்றும் கேள்விப் பத்திரங்களை தயாரித்தல் போன்ற ஒப்பந்தத்திற்கு முன்னைய பொறுப்புக்களையும், கட்டுமான முகாமைத்துவ சேவைகளை வழங்குதல் போன்ற ஒப்பந்தத்திற்குப் பிந்திய பொறுப்புக்களையும் நாங்கள் மேற்கொள்கிறோம். கேள்விப்பத்திர செயல்முறை பொறுப்பை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்வர்.

வாடிக்கையாளரிடம் நிதி தக்கவைக்கப்பட்டு, வாடிக்கையாளர் கட்டுமானப் பணிகளுக்கான கட்டணத்தை செலுத்துவர்.

செயற்திட்ட முகாமைத்துவம் (செயற்திட்ட அமுல்படுத்துனராக / முகாமையாளராக இருத்தல்)

ஆலோசனை வழங்குகின்ற மற்றும் நிர்மாணித்தலில் ஈடுபடுகின்ற முகவர்களை நிர்வகிக்கும் பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். வாடிக்கையாளருக்கு ஆலோசனை வழங்குவதனை அல்லது அமுலாக்கலை நாங்கள் மேற்கொள்வோம். நாங்கள் தனியார் துறை முதலீட்டுத் திட்டங்களான BOT, BOOT, வடிவமைத்தல் மற்றும் அரசாங்க அல்லது மானியம் வழங்கும் முகவர் மூலமான ஒப்பந்தங்களை கையேற்கின்றோம். வாடிக்கையாளரிடம் நிதி தக்கவைக்கப்பட்டு, வாடிக்கையாளர் கட்டுமானப் பணிகளுக்கான கட்டணத்தை செலுத்துவர்.

பராமரிப்பு, சிறப்பு பழுதுபார்ப்பு, மேம்பாடுகள்(வாடிக்கையாளருக்கு வசதியளித்தல் வகிபாகமாக காணப்படும்)

நிபந்தனை அறிக்கைகள், பராமரிப்பு கையேடுகள், பராமரிப்பு மதிப்பீடுகளை தயாரித்தல் மற்றும் பராமரிப்பு செயல்படுத்தல்கள், கட்டிட மறுசீரமைப்புகள், உள்கட்டமைப்பு ஆகியவற்றை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம்.

பணிகளை மேற்கொள்வதற்காக கட்டிடத் திணைக்களத்திற்கு நிதி விடுவிக்கப்படும்

வழங்கப்படுகின்ற ஏனைய சேவைகள்

திறமையான அதிகாரிகளை உறுப்பினர்களாக நியமிப்பதன் மூலம் ஏனைய நிறுவனங்களின் கொள்வனவுக் குழுக்கள், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள், நிலையான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள், துணைக் குழுக்கள் மற்றும் பிற தொடர்புடைய குழுக்களில் நாங்கள் பங்கேற்கின்றோம்.

மேலும், கட்டிட நிர்மாணம் மற்றும் திருத்தியமைத்தலுக்கான விலை வீதப் பொழிப்பு (BSR) வெளியிடப்படுகின்றது.

1.3 பிரதான செயற்பாடுகள்

திணைக்களமானது நிதிப்பிரமாணங்கள் 787, 788, 789 மற்றும் 790 ஆகியவற்றின் கீழ் அதிகாரம் பெற்றுள்ளது. அதன்படி, திணைக்களமானது தொழில்நுட்பம் அல்லாத துறைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களிடமிருந்து பின்வரும் பொறுப்புகளை கையேற்கின்றது.

திணைக்களமானது எமது அர்ப்பணிப்பிற்கு மிகவும் கட்டுப்படும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்த வடிவில் உடன்படிக்கையுடன் சேவைகளை வழங்குகிறது.

திணைக்களத்தின் பிரதான செயல்பாடுகள் பின்வருமாறு

1. அரசாங்க அமைச்சகங்கள், திணைக்களங்கள் மற்றும் முகவர் நிலையங்களின் வாக்குப்பணப் பேரேட்டுக்கு வழங்கப்படும் நிதி ஒதுக்கீடுகள் மூலம் கட்டிடங்கள் மற்றும் தொடர்புடைய வசதிகளின் திட்டமிடல், வடிவமைப்பு, மதிப்பீடு மற்றும் நிர்மாணம்.
2. கட்டிட வேலைகளில் பிராந்திய நிறுவனங்களுக்கு ஆலோசனைகள் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ சேவைகளை வழங்குதல்.
3. அரசு கட்டிடங்களில் பராமரிப்பு, சேர்த்தல் மற்றும் மேம்பாடு
4. அரசு குடியிருப்புகள் மற்றும் விடுதிகளில் சேர்த்தல், மேம்படுத்துதல், பராமரித்தல்.
5. திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் அனைத்து கட்டிட வேலைகளுக்கும் தொழில்நுட்ப பொறுப்புணர்வை உறுதி செய்தல் .
6. 2018.05.25 அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அடுக்குமாடி குடியிருப்பு உரிமைச் சட்டத்தின் (சிறப்பு விதிகள்) படி புலமைச் சொத்துக் கட்டிடங்களுக்கான சான்றிதழ் வழங்குதல்
7. ஏனைய நிறுவனங்களுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்

08. பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய தொழில்நுட்ப நிறுவனங்களின் இளங்கலை மற்றும் மாணவர்களுக்கு உள்ளக பயிற்சி வசதிகளை வழங்குதல்.

09. அரசாங்க நிறுவனங்களின் உள்ளக மற்றும் வெளியகத் திணைக்களங்களிடமிருந்து சிவில் பொறியியலாளர்களுக்கு பட்டயப் பொறியியலாளர் தகைமையை பெற்றுக் கொள்வதற்காக வடிவமைப்பு அலுவலக பயிற்சி வசதிகளை வழங்குதல்.

10. கட்டுமானம் மற்றும் கட்டிட பராமரிப்பு வீதப் பட்டோலைகளைத் (BSR) தயாரித்தல் மற்றும் புதுப்பித்தல்

11. UDA இன் பொது ஒழுங்குமுறையின்படி கட்டிட நிலை அறிக்கைச் சான்றிதழை வழங்குதல்.

1.4 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

1. மதியுரைப் பிரிவு
   - கட்டிடக் கலைப் பிரிவு
   - கட்டமைப்பு பிரிவு
   - மின்னியல் பிரிவு
   - நீர்வழங்கல் மற்றும் வடிகாலமை
   - இயந்திரவியல் பிரிவு
   - மதிப்பீட்டுப் பிரிவு

2. கொள்வனவு மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி
   - திட்டமிடல் பிரிவு
   - முகாமைத்துவ அபிவிருத்தி பிரிவு
   - ஓப்பந்த பிரிவு

3. வலய அலுவலகம்
   - மேற்கு – வடக்கு
   - மேற்கு – தெற்கு
   - வலயம் 02- யாழ்ப்பாணம்
   - வலயம் 03-குருணாகல்
   - வலயம் 04- மட்டக்களப்பு
   - வலயம் 05- கண்டி
   - வலயம் 06- காலி

4. நிர்வாகப் பிரிவு
5. நிதிப் பிரிவு
6. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

1.5 அமைச்சு/ திணைக்களம்/ மாகாண சபையின் கீழ் வரும் நிறுவனங்கள்/நிதியங்கள்

- பொருத்தமற்றது –

அத்தியாயம் 02 - செயல் முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்

நிறுவனத்தின் தலைவர், தலைமை நிர்வாக அதிகாரி/நிர்வாக அதிகாரி கையெழுத்திடுவதற்காக குறிப்பிடப்பட வேண்டிய சாதனைகள், சவால்கள் மற்றும் எதிர்கால நோக்கங்களின் சுருக்கமான விளக்கம்.

2.1 2024 வரையிலான கடந்தகாலச் செயலாற்றல்



	2015	2016	2017	2018	2019	2020	2021	2022	2023	2024
Rehabilitation	363.13	603.43	502.77	446.62	283.49	278.61	493.71	59.92	0.00	1003.04
New Buildings	1940.68	3313.95	4759.63	4886.74	4527.99	1672.08	2417.96	2116.12	1614.42	1689.90
Total	2303.81	3917.38	5262.40	5333.36	4811.48	1950.69	2911.67	2176.04	1614.42	2692.94

Rehabilitation New Buildings Total

உரு 3: 2024 வரை கடந்தகால செயலாற்றல்

கட்டிடங்கள் திணைக்களமானது தனது வாடிக்கையாளர்களான ஏனைய அமைச்சகங்கள், திணைக்களங்கள் மற்றும் அரசு நிறுவனங்களுக்கு சேவைகளை வழங்குகிறது. திணைக்களம் வழங்கும் முக்கிய சேவைகளை புதிய கட்டிடங்கள், உள்கட்டமைப்பு கட்டுமானங்கள் மற்றும் புனரமைப்புகள் என வகைப்படுத்தலாம். அட்டவணை 1 மற்றும் உரு 4 இல் காட்டப்பட்டுள்ளபடி திணைக்களம் 2015 ஆம் ஆண்டில் ரூபா 2303.81 மில்லியனாக காணப்பட்ட அதன் செயலாற்றலை 2024 ஆம் ஆண்டில் ரூபா 2692.94 மில்லியன் ஆக அதிகரித்திருந்தது. அது 2023 முதல் 2024 வரை 67 சதவீத செயலாற்றல் அதிகரிப்பைக் காட்டுகின்றது.

அட்டவணை 1 : 2015-2024 ஆண்டிலிருந்து வருடாந்த அதிகரிப்பு

ஆண்டு	வருடாந்த செயலாற்றல்	அதிகரிப்பு சதவீதம்	அதிகரிப்பு சதவீதம்
	ரூபா மில்லியன்	2015 இன் அடிப்படை	முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு
2015	2303.81		
2016	3917.38	70	70
2017	5262.40	128	34
2018	5333.35	132	1
2019	4811.48	109	-10
2020	1950.69	-15	-59
2021	2911.67	26	49
2022	2176.04	-6	-25
2023	1614.42	-30	-26
2024	2692.94	17	67



உரு 4: செயலாற்றல் அதிகரிப்பு

அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ளபடி, 2023 முதல் 2024 வரையிலான காலத்தில் திணைக்களத்தின் செயலாற்றல் ரூபா 1,614.42 மில்லியனில் இருந்து ரூபா 2,692.94 மில்லியனாக அதிகரித்துள்ளது.

கீழே உள்ள அட்டவணை 2 ஆனது புனரமைப்பு மற்றும் புதிய கட்டிடங்களின் செயலாற்றலைக் காட்டுகின்றது. 2023 முதல் 2024 வரை புதிய கட்டிடங்களின் செயலாற்றல் 9% இனாலும் பேணுகை மற்றும் புனரமைப்பு திட்டங்களின் செயலாற்றல் 1592% இனாலும் அதிகரித்துள்ளது. ஒட்டுமொத்த செயலாற்றல் 67% ஆல் அதிகரித்துள்ளது.

அட்டவணை 2: பிரிவுகளின் வருடாந்த செயலாற்றல் ஒப்பீடு

பிரிவுகள்	வருடாந்த செயலாற்றல் (மில்.)		% அதிகரிப்பு (முன்னைய ஆண்டின் அடிப்படையில்)
	2023	2024	
பேணுகை மற்றும் புனரமைப்பு	59.27	1003.04	1592%
புதிய கட்டிடங்கள்	1555.15	1689.90	9%
மொத்தம்	**1614.42**	**2692.94**	**67%**

2.2 2024 இல் செயற்திட்டங்களின் பொழிப்பு



	Jan	Feb	March	April	May	June	July	Aug	Sep	Oct	Nov	Dec
2024 Target	244.03	528.51	898.04	1056.81	1274.07	1648.57	1647.43	2135.94	2738.73	2071.61	2468.99	3379.09
2024 Progress	137.41	363.01	540.18	693.46	776.22	1086.28	1245.49	1381.36	1578.33	1836.78	1961.76	2692.94

உரு 5 : நிர்மாணச் செயலாற்றலை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுதல்.

திணைக்களம் 2024 ஆம் ஆண்டில் 210 செயற்திட்டங்களைக் கையாண்டதுடன், அவற்றில் 151 செயற்திட்டங்கள் 25 மில்லியன் வரையிலான திட்ட மதிப்பைக் கொண்டவையாகவும், 36 செயற்திட்டங்கள் 25 மில்லியன் முதல் 100 மில்லியன் வரையிலான திட்ட மதிப்பைக் கொண்டவையாகவும், 07 திட்டங்கள் 100 மில்லியன் முதல் 200 மில்லியன் வரையிலான திட்ட மதிப்பைக் கொண்டவையாகவும் காணப்பட்டதுடன் மேலும் 16 செயற்திட்டங்கள் 200 மில்லியன் மதிப்பிற்கு மேற்பட்டவையாக காணப்பட்டன.

அட்டவணை 3 : 2024 ஆம் ஆண்டில் கட்டுமானப் பிரிவு செயற்திட்டங்களின் சுருக்கம்

வலய அலுவலகம்	செயற்திட்ட பெறுமதி ரூபா (மில்.)				
	0-25	**25-100**	**100-200**	**>200**	**மொத்தம்**
மேற்கு – தெற்கு	21	08	02	05	36
மேற்கு – வடக்கு	24	02	00	01	27
வலயம் 2	12	02	01	01	16
வலயம் 3	10	06	00	01	17
வலயம் 4	60	05	01	01	67
வலயம் 5	08	04	01	02	15
வலயம் 6	16	09	02	05	32
மொத்தம்	151	36	07	16	210

மேலும், கட்டிடத் திணைக்களமானது ஏனைய நிறுவனங்களின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான கிரய மதிப்பீடுகளை தொடர்ந்து வழங்கியது. 2024 ஆம் ஆண்டிற்காக சுமார் ரூபா 14,170.02 மில்லியன் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. சேவை வழங்குநர்களுக்கு நிதி கிடைக்காததால் மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்படாததுடன் ஒப்புதலுக்குப் பிறகு மேலும் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.
(அட்டவணை 4).

அட்டவணை 4 : 2024 இல் வாடிக்கையாளர்களின் கோரிக்கையின் மீது சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடுகள்

திணைக்கள வலய அலுவலகம்	**2024 இல் சமர்ப்பித்த மதிப்பீடுகளின் எண்ணிக்கை**	**மதிப்பீடுகளின் பெறுமதி (ரூபா மில்லியன)**
வலயம் - மேற்கு – தெற்கு	82	2,175.28
வலயம் மேற்கு – வடக்கு	68	4,569.51
வலயம் 2	42	734.71
வலயம் 3	20	926.75
வலயம் 4	80	1,990.61
வலயம் 5	45	1,406.52
வலயம் 6	69	2,366.64
மொத்தம்	**406**	**14,170.02**

2.3 மதியுரைப் பிரிவின் செயலாற்றல்

மதியுரை பிரிவு என்பது திணைக்களத்தால் வழங்கப்படும் சேவைகளின் மையமாகும். கட்டிடங்கள், தொடர்புடைய உட்கட்டமைப்புகள் மற்றும் அளவுத்திட்ட பட்டியல்கள் தொடர்பான கட்டிடக்கலை, கட்டமைப்பு, மின்சாரம், நீர் வழங்கல், வடிகால் மற்றும் இயந்திர வடிவமைப்பு போன்ற வடிவங்களில் வடிவமைப்புச் சேவைகளை இந்த பிரிவு வழங்குகின்றது. மேலே உள்ள சேவைகள் அர்ப்பணிப்புள்ள தொழில்முறை கட்டிடக் கலைஞர்கள் மற்றும் பொறியியலாளர்களால் வழங்கப்படுகின்றன. 2020 முதல் 2024 ஆண்டு வரையிலான செயலாற்றலை அட்டவணை 5 காட்டுகின்றது.

அட்டவணை 5(அ): கட்டிடக்கலைப் பிரிவின் செயலாற்றல் பொழிப்பு

		2020	2021	2022	2023	2024
வரைபட வடிவமைப்பு	இலக்கு	57	67	19	38	78
	முன்னேற்றம்	50	61	18	34	62
விரிவான வடிவமைப்பு	இலக்கு	23	55	21	14	28
	முன்னேற்றம்	12	40	14	12	24

அட்டவணை 5(ஆ): பொறியியல் கட்டமைப்பு பிரிவின் செயலாற்றல்

விரிவான வடிவமைப்பு	இலக்கு	36	40	19	28	30
	முன்னேற்றம்	09	42	14	12	15

அட்டவணை 5(இ): 2023 இல் நீர்வழங்கல் மற்றும் கழிவகற்றல் பிரிவின் செயலாற்றல்

விரிவான வடிவமைப்பு	இலக்கு	25	56	21	20	20
	முன்னேற்றம்	17	52	18	14	20

அட்டவணை 5(ஈ): மின்னியல் செயற்திட்டப் பிரிவின் செயலாற்றல் பொழிப்பு

விரிவான வடிவமைப்பு	இலக்கு	26	64	21	17	14
	முன்னேற்றம்	24	63	21	17	14

அட்டவணை 5(உ): இயந்திர பொறியியல் பிரிவின் செயலாற்றல்

விரிவான வடிவமைப்பு	இலக்கு	25	61	24	13	25
	முன்னேற்றம்	25	61	24	13	25

அட்டவணை 5(ஊ): மதிப்பீட்டுப் பிரிவின் செயலாற்றல்

கனிய அளவீடு தயாரித்தல்	இலக்கு	20	26	13	7	3
	முன்னேற்றம்	8	29	10	4	3

பராமரிப்பு தொழில்நுட்ப அறிக்கைகள் மற்றும் பிறவற்றின் அடிப்படையில், 2024 ஆம் ஆண்டில் ஆலோசனைப் பிரிவின் செயல்திறன் அட்டவணை 6 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 6: 2024 2024 ஆம் ஆண்டில் ஆலோசனைப் பிரிவின் செயலாற்றல்

பிரிவு	தொழில்நுட்ப அறிக்கைகள்	பராமரிப்பு	புதுப்பித்தல், பராமரிப்பு மற்றும் பிற பணிகளுக்கான மதிப்பீடுகளைத் தயாரித்தல்	திட்டங்கள், கட்டுமானம் மற்றும் மாதிரித் திட்டங்கள்
கட்டமைப்பு பொறியியல் பிரிவு	49	-	-	40
நீர் வழங்கல் மற்றும் வடிகால் பிரிவு	09	-	-	-
மின் பொறியியல் பிரிவு	17	50	-	-
இயந்திர பொறியியல் பிரிவு	15	-	-	-
மதிப்பீட்டுப் பிரிவு	-	-	42	-
மொத்தம்	**90**	**50**	**42**	**40**

2.4 புலமைச்சொத்து செயற்திட்டங்களின் சான்றிதழ்

2018.05.25 அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அடுக்குமாடி உரிமைச் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) படி, புலமைச் சொத்துக் குடியிருப்பு பாதுகாப்பிற்கான கட்டிடச் சான்றிதழை வழங்குவதற்காக வீட்டு அலகுகளை திணைக்களம் ஆய்வு செய்தது. அட்டவணை 6 இல் காட்டப்பட்டுள்ளபடி பிரதேச செயலகப் பிரிவுகளில் 2024 இல் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் ந
ிர்மாணிக்கப்பட்ட மொத்தம் 468 வீடுகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

அட்டவணை 6: புலமைச்சொத்து செயற்திட்டங்கள்- வீட்டு அலகுகள்

	2022/12/31 வரை	2024 ஆம் ஆண்டில்	மொத்தம்
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை	1246	248	1494
இலங்கை காணிகள் மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம்	144	-	144
பிரதேச செயலகங்கள்	412	160	572
முாநகர சபைகள்	32	-	32
நுகர்ப்புற குடியேற்ற அபிவிருத்தி அதிகாரசபை	-	60	60
மொத்தம்	**-**	**468**	**-**

அத்தியாயம் 03 - 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒட்டுமொத்த நிதி செயலாற்றல்

3.1 நிதிச் செயலாற்றல் கூற்று

ஏசீஏ- எப்

2024 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

திருத்திய பாதீட்டு மதிப்பீடு 2024		குறிப்பு	உண்மை நிலை 2024	உண்மை நிலை 2023	
	வருமானப் பெறுகைகள்		-	-	
-	வருமான வரி	1	-	-	ஏசீஏ-1
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2			
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
-	**மொத்த வருமானப் பெறுகைகள் (அ)**		-	-	
	வருமானமற்ற பெறுகைகள்				
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		1,710,808,000	1,744,858,000	ஏசீஏ-3
-	வைப்புகள்		729,237,637	655,733,191	ஏசீஏ-4
-	முற்பணக் கணக்குகள்		23,607,299	25,680,234	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-	
-	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)**		**2,463,652,936**	2,426,271,425	
-	**மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)**		**2,463,652,936**	2,426,271,425	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		**258,000,000**	110,000,000	
-	**தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)**		**2,205,652,936**	2,316,271,425	
	கழி : செலவினம்				
2,029,000,000	**மீண்டுவரும் செலவினம்**				
1,280,600,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	405,430,061	360,320,160	
238,340,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	166,310,558	154,946,611	ஏசீஏ-2(ii)
109,760,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	1,686,450	1,857,406	
0	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
400,300,000	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	52,500	128,377	
2,029,000,000	**மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)**		**573,479,569**	517,252,554	
227,000,000	**மூலதனம் செலவினம்**				
16,300,000	மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	13,746,550	14,879,199	
7,000,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	5,904,977	1,890,775	
0	மூலதன மாற்றல்கள்	12	-	-	ஏசீஏ-2(ii)
0	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
5,000,000	திறன் விருத்தி	14	900,000	834,013	
198,700,000	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	-	39,350	
227,000,000	**மொத்த மூலதனம் செலவினம் (எ)**		**28,551,527**	17,643,337	
167,430,826	வைப்புக் கொடுப்பனவுகள்		**819,078,750**	1,384,230,520	ஏசீஏ-4
50,000,000	முற்பணக் கொடுப்பனவுகள்		**26,739,931**	23,994,736	ஏசீஏ-5
-	கொடுப்பனவுகள்		-	-	
1,535,200,454	**மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)**		845,818,681	1,408,225,256	
3,791,200,454	**மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)**		1,439,849,777	1,943,121,147	
(54,180,282)	**டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)**		765,803,159	373,150,278	
	கட்டுநிதி இணக்க அறிக்கையின்படி மீதி		764,038,537	373,150,278	ஏசீஏ-7
-	**டிசம்பர் 31ல் உள்ளவாறான கட்டுநிதி மீதி**		1,764,622	-	ஏசீஏ-3

3.2 நிதி நிலைமைக் கூற்று

2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

ஏசீஏ -பீ

2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான

நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2024 ரூபா	2023 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	872,812,849	849,295,652
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	67,002,513	63,869,881
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		**939,815,362**	**913,165,533**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		(486,042,816)	(577,251,939)
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		872,812,849	849,295,652
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ	-	-
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	551,280,707	641,121,820
கட்டுநிதி மீதி	ஏசீஏ-3	1,764,622	-
மொத்தப் பொறுப்புக்கள்		**939,815,362**	**913,165,533**

பக்க இலக்கம் 01 முதல் 33 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் .... முதல் .... வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்

கணக்கீட்டு உத்தியோகத்தர்

பிரதம நிதி உத்தியோகத்தா;/பிரதம கணக்காளர்

பெயர்:
பதவி:

திகதி : 2025.02.26 திகதி :2025.02.24 திகதி : 2025.02.24

3.3 காசுப் பாய்ச்சல் கூற்று

2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

ஏசீஏ- சீ

2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று	உண்மை 2024 ரூபா	2023 ரூபா
<u>தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u>		-
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	280,688,300	272,495,073
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	1,710,808,000	1,744,858,000
முற்பணங்களை அறவிடல்	22,465,620	23,878,266
வைப்புக்களின் பெறுகை	729,237,637	655,733,192
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)		
<u>கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு</u>		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள்	569,621,194	513,030,848
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	1,686,450	1,857,406
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	1,045,683,687	646,295,305
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	258,000,000	110,000,000
முற்பணக் கொடுப்பனவு	26,813,327	23,907,114
வைப்புக் கொடுப்பனவு	819,078,750	1,384,230,520
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**2,720,883,408**	**2,679,321,193**
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**22,316,149**	**17,643,337**
<u>முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்</u>	-	-
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	-	-
<u>**கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:**</u>		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	20,551,527	17,643,337
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	20,551,527	17,643,337
முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	(20,551,527)	(17,643,337)
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	**1,764,622**	**-**
<u>**நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்**</u>		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	-	-
<u>***கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:***</u>		
உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	-	-
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)	**1,764,622**	**-**
ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-

3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

அறிக்கையிடலின் அடிப்படை

1. **தயாரித்தலின் நோக்கம்**

அரசு நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 மற்றும் 16.12.2024 தேதியிட்ட பொதுக் கணக்கு வழிகாட்டுதல்கள் இல. 06/2024 ஆகியவற்றின் விதிகளின்படி நிதிநிலை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

2. **அறிக்கையிடல் காலப்பகுதி**

இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2024 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

3. **அளவீட்டுக்கான அடிப்படை**

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

4. **வருமானத்தை அடையாளங்காணுதல்**

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

5. **சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு**

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

6. **சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்**

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

7. **காசு மற்றும் காசுக்கு சமமானவை**

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2024 டிசம்பர் 31 இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

* ஒரு குறிப்பிட்ட அறிக்கையிடல் நிறுவனத்திற்கு குறிப்பிட்ட பரிவர்த்தனைகள் இருக்கும் சந்தர்ப்பங்களில் பொருத்தமான தகவல்களை அரச கணக்குகள் திணைக்களத்தின் அனுமதியுடன் உள்ளடக்கலாம் . அந்த குறிப்பிட்ட பரிவர்த்தனைகளுக்கு தேவையான வெளிப்படுத்தல் ‘‘அறிக்கையிடலின் அடிப்படை’’ என்பதற்குக் கீழ் சேர்க்கப்படலாம்.

* அறிக்கையிடல் நிறுவனத்திற்கு தொடர்புடைய கணக்கியல் கொள்கைகள் மட்டுமே ”அறிக்கையிடலின் அடிப்படை” இன் கீழ் வெளிப்படுத் தப்படவேண்டும்.

3.5 வருவாய் சேகரிப்பின் செயலாற்றல்

ரூபா 000

வருமான குறியீடு	வருமான குறியீட்டு விபரம	வருவாய் மதிப்பீடு		வசூலித்த வருவாய்	
		அசல்	இறுதி	தொகை (ரூ.)	இறுதி வருவாய் மதிப்பீட்டின் சதவீதமாக
	பொருந்தாது				

3.6 ஒதுக்கீட்டைப் பயன்படுத்துவதன் செயலாற்றல்

ஒதுக்கீட்டின் வகை	மூலதனம் (ரூ.)		உண்மையான செலவினம் (ரூ.)	இறுதி ஒதுக்கீட்டின் சதவீதமாக பயன்பாடு
	மூலமதிப்பீடு	இறுதி மதிப்பீடு		
மீண்டுவரும்	568,400,000.00	589,054,000.00	573,479,568.56	97.36%
மூலதனம்	20,700,000.00	20,700,000.00	20,551,526.74	99.28%

3.6அ நி.பி. 208 இன் அடிப்படையில் இந்த திணைக்களம் /மாவட்டச் செயலகம்/ மாகாண சபை/ ஏனைய அமைச்சகங்கள் /திணைக்களங்களின் முகவராகச் செலவழிப்பதற்காக வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள்

இல.	திணைக்களம் /அமைச்சு	திட்ட எண்ணிக்கை	2024 இல் கிடைத்த நிதி (தேறியது)	2024.12.31 வரை செலவினம்	மீதி	செயல் முன்னேற்றம் (%)
1	தேர்தல் ஆணைக்குழு	07	27,798,015.08	27,798,015.08	-	100
2	பொலிஸ் திணைக்களம்	20	363,153,478.05	363,153,478.05	-	100
3	நிலப் பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்	02	386,117.99	386,117.99	-	100
4	தேசிய நூதனசாலைகள் திணைக்களம்	08	78,225,564.61	78,225,564.61	-	100
5	இலங்கை சுங்கம்	01	592,067.19	592,067.19	-	100
6	ஆயுர்வேத திணைக்களம்	11	85,304,316.57	85,304,316.57	-	100
7	பாதுகாப்பு அமைச்சகம்	02	17,487,284.25	17,487,284.25	-	100
8	தபால் திணைக்களம்	03	71,164,000.00	71,164,000.00	-	100
9	சுகாதார அமைச்சகம்	32	303,959,134.73	303,959,134.73	-	100
10	விவசாய ஏற்றுமதி திணைக்களம்	02	11,711,022.16	11,711,022.16	-	100
11	நீதி மற்றும் தேசிய ஒருங்ணைப்பு அமைச்சு	02	28,703,698.22	28,703,698.22	-	100
12	விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சகம்	07	5,599,124.23	5,599,124.23	-	100
13	புத்தசாசன அமைச்சு	05	11,872,362.32	11,872,362.32	-	100
14	மதிப்பீட்டுத் திணைக்களம்	01	6,053,016.41	6,053,016.41	-	100
15	பிடவைக் கைத்தொழில் திணைக்களம்	01	8,156,000.00	8,156,000.00	-	100
16	உள்நாட்டு இறைவரி திணைக்களம்	01	3,519,054.00	3,519,054.00	-	100
17	சமூக சேவைகள் திணைக்களம்	01	11,775,000.00	11,775,000.00	-	100
18	மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் திணைக்களம்	07	7,753,183.59	7,753,183.59	-	100
19	கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு	01	-	-	-	-
20	காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்	01	-	-	-	-
மொத்தம்		**115**	1,043,212,439.40	1,043,212,439.40	-	-

3.7 நிதியல்லாத சொத்துகளின் அறிக்கையிடல் செயலாற்றல்

சொத்துக் குறியீடு	குறியீட்டு விபரம்	2024.12.31 இன் மெய்மையாய்வுச் சபை அறிக்கையின்படி மீதி (ரூபா)	2024.12.31 இன் நிதி நிலைமைக் கூற்றின் படி மீதி(ரூபா)	இதுவரை கணக்கீடு செய்யப்படாதவை	அறிக்கையிடப்பட்டவைகளின் செயல் முன்னேற்ற சதவீதம்
9151	கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள்	121,344,330.71	121,344,330.71	-	100
9152	இயந்திரம் மற்றும் உபகரணங்கள்	279,133,766.84	279,133,766.84	-	100
9153	காணிகள்	465,998,355.60	465,998,355.60	-	100
9154	அருவச் சொத்துக்கள்	6,236,396.22	6,236,396.22	-	100
9155	உயிரியல் சொத்துக்கள்	-	-	-	-
9160	நடைபெற்றுவரும் வேலை	100,000.00	100,000.00	-	100
9180	குத்தகை சொத்துக்கள்	-	-	-	-

3.8 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை***

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය எனது இல. My No.	சீஏஈ/ஏ/பீடீ/எ.்.ப்எஸ்/2024/01	දිනය திகதி Date	2025 மே 29

பணிப்பாளர் நாயகம்
கட்டிடத் திணைக்களம்

தலைப்பு – 309, கட்டிடத் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு – 309, கட்டிடத் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கட்டிடத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படும் இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய விரிவான முகாமைத்துவ அறிக்கை 2025 மே 28 ஆந் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டிடத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 முக்கியத்துவமான விடயமொன்றை சுட்டிக்காட்டுதல் - நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதன் அடிப்படையை விவரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 01 இற்கு கவனத்தை ஈர்க்கிறேன். நிதிக்கூற்றுக்களானது அரசாங்க நிதி ஒழுங்குமுறைகள் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 அன்று திருத்தப்பட்ட 2024 டிசம்பர் 16 தேதியிட்ட 06/2024 ஆம் இலக்க பொதுக் கணக்குகள் வழிகாட்டுதல் படி, கட்டிடங்கள் திணைக்களத்தினதும் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. ஆகையால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமானதாக இருக்காது. எனது அறிக்கையானது கட்டிடங்கள் திணைக்களத்தினதும் திறைசேரி மற்றும் இலங்கை பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டு நோக்கத்திற்கு மாத்தரமே தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் எனது அபிப்பிராயம் திருத்தியமைக்கப்படவில்லை.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசாங்க நிதி ஒழுங்குமுறைகள் 150 மற்றும் 151 மற்றும் 2024 டிசம்பர் 16 தேதியிட்ட 06/2024 ஆம் இலக்க பொதுக் கணக்குகள் வழிகாட்டுதல் படி, அனைத்து பொருண்மையான அம்சங்களையும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.
தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி

அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.
என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு எண்ணவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கம் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கட்டுநிதி கணக்கிணக்கக் கூற்று

2024 டிசம்பர் 16 ஆந் தேதியிட்ட 06/2024 ஆம் இலக்க பொதுக் கணக்குகள் வழிகாட்டி இன் பந்தி 07.11 இன் படி ACA-7 படிவத்தின் பிரகாரம் கட்டுநிதி கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், ஏனைய நிறுவனங்களின் சார்பாக சேகரிக்கப்பட்ட வருமானத்திலிருந்து மீள வழங்கப்பட்ட ரூபா 2,736,616 தொகை அறிக்கையிடும் நிறுவனத்தின் சார்பாக சேகரிக்கப்பட்ட வருமானமாக கட்டுநிதி கணக்கிணக்கக் கூற்றில் தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

1.6.2 நிதி சாராத சொத்துக்கள்

திணைக்களத்திற்குச் சொந்தமான 18 நிலங்கள் மற்றும் 26 கட்டிடங்களுக்கான மதிப்பிடப்பட்ட பெறுமதிகள் இல்லாததால், நிதி அறிக்கைகளில் (ACA-6 / SA-82) காட்டப்பட்டுள்ள நிலம் மற்றும் கட்டிட பெறுமதிகள் குறைத்து கணிப்பிடப்பட்டுள்ளன.

1.6.3 கட்டுநிதி முகாமைத்துவம்

குட்டுநிதிக் கணக்கு இல. 67/24 தொடர்பாக மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில் நிலுவையில் உள்ள கட்டுநிதி மீதி ரூபா 1,764,622 ஆகும். நிதி அறிக்கையின் படிவம் ACA-3 இல் கட்டுநிதி தீர்க்கப்படாததற்கான காரணங்கள் குறிப்பிடப்படவில்லை.

1.6.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்களை பராமரிக்கத் தவறியமை.

	பதிவேட்டின் வகை	தொடர்புடைய பிரமாணம்	அவதானிப்பு
(அ)	பதவியிணர் பிணை பதிவேடு	நிதிப்பிரமாணம் 880 இன் ஏற்பாடுகள்	நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை.
(ஆ)	உத்தியோகபூர்வ வதிவிட காத்திருப்பு பதிவேடு	தாபனவிதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 4.3.3 ஆம் பிரிவு	நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை.

2. ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் குறிப்பிடுகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடுசெய்யப்படக் கூடியவை,

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துதல்

பாதீட்டு மதிப்பீடுகளைத் தயாரிப்பதில் சரியான ஆய்வு மற்றும் திட்டமிடல் இல்லாததால், 04 செலவின விடயங்களில் 55 சதவீதம் முதல் 83 சதவீதம் வரையான வீச்சில் நிதி ஒதுக்கீடுகள் சேமிக்கப்பட்டிருந்தது.

3.2 ஏனைய அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களின் நிதி ஒதுக்கீடுகள் மீது செயற்திட்டங்களை நிறைவேற்றுதல்

கடந்த 04 ஆண்டுகளில் அரச மற்றும் அரை அரச நிறுவனங்களால் கட்டிடத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 1,282 மில்லியன் மதிப்புள்ள 03 கட்டுமான ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் ஏற்பட்டிருந்ததுடன் கட்டுமான முன்னேற்றம் மோசமான மட்டத்தில் இருந்தது.

3.3 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்

(அ) நிதி அறிக்கைகளிலுள்ள பொறுப்புகள் மற்றும் கடப்பாட்டு அறிக்கையில், 309-1-1-1301 மற்றும் 309-2-2-1301 ஆகிய செலவின உருப்படிகளின் கீழ் முறையே ரூபா 81,270 மற்றும் ரூபா 300,536 பொறுப்புகள் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணங்கள் கையேட்டின் 94 (1) ஆம் நிதிப்பிரமாணத்தின் படி, வருடாந்த மதிப்பீடுகளில் ஏதேனும் ஏற்பாடுகள் இல்லாவிட்டால், எந்தவொரு திணைக்களத்தினாலும் எந்தவொரு வேலை, சேவை அல்லது விநியோகத்திற்காக எந்தவொரு செலவையும் அல்லது கடப்பாட்டையும் மேற்கொள்ளலாகாத போதிலும், உரிய ஆய்வு மற்றும் திட்டமிடல் ஒன்று இன்றி மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தமையால் 309-1-1-1301 செலவின உருப்படிகளின் கீழான ரூபா 1,527 சேமிப்பை விஞ்சி ரூபா 79,743 கடப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தது.

3.4 செலவின முகாமைத்துவம்

வருடாந்த மதிப்பீட்டைத் தயாரிக்கையில் உரிய ஆய்வு மற்றும் திட்டமிடல் ஒன்று இன்றி அது தயாரிக்கப்பட்டிருந்தமையால், 309-1-1-1304 மற்றும் 309-2-2-1703 செலவின உருப்படிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த முறையே ரூபா 2,000,000 மற்றும் ரூபா 100,000 நிதி ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருக்காத காரணத்தால் முழுமையான நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு	இணக்கமின்மை
(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை நிதிப்பிரமாணம் 1645	பேணப்பட வேண்டிய வாகன சரிதைப் புத்தகங்கள் நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை.
(ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கையேடு 8.8.1. (அ)	புறக்கணிக்கப்பட் விலைமனு தாரர்களுக்கு விசேட குறைபாடுகளைச் சுட்டிக்காண்பித்து விலை மனுவை தள்ளுபடி செய்தமைக்கான காரணங்கள் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.
(இ) 2016.12.29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கை	ஒவ்வொரு எரிபொருள் நுகர்வுப் பரிசோதனையிலிருந்து 12 மாதங்களின் பின்னர் அல்லது 25,000 கி.மீ. பயணித்த பின்னர் அல்லது என்ஜின் மீது பிரதானமான திருத்தமொன்றை செய்த பின்னர் ஆகிய நிகழ்வுகளில் எது முன்னராக நிகழ்கின்றதோ அதன்போது மீண்டும் எரிபொருள் நுகர்வுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்திற்குரிய 04 வாகனங்களிற்கு எரிபொருள் நுகர்வுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.6 வைப்புக்கள்

(அ) காலாவதியான அனைத்து வைப்புத்தொகைகளும் நிதிப்பிரமாணம் 571(2) இன் பிரகாரம் அரசாங்க வருமானத்துக்கு செலவு வைக்கப்பட வேண்டும் என்றாலும், 6000-0-0-16-033 ஆம் இலக்கம் கொண்ட வைப்புத்தொகை கணக்குடன் தொடர்புடைய 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலான காலாவதியான வைப்புத்தொகை தொகையான ரூபா 12,140,274 தொடர்பாக அத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 571(3) இன் அடிப்படையில் காலவரையின்றி கணக்கில் வைக்கப்பட்டுள்ள வைப்புப் பணத்தை காலாவதியான வைப்புத்தொகையாகக் கருதுவதற்கு இடமளிக்காது பொருத்தமான விதத்தில் குறித்த கணக்கிற்கு, அரசாங்க வருவாய்க்கு செலவு வைப்பதற்கு, அல்லது விரைவில் மீளளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றாலும், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கட்டுமானத் திட்டங்களுக்கான வைப்புத்தொகையாகப் பெறப்பட்ட ரூபா 31,228,168 தொகை தொடர்பில் மேற்குறித்தவாறு நடவடிக்கை எடுக்காமல் திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 தூரநோக்கு மற்றும் செயற்பணி

அர்ப்பணிப்புள்ள பல்துறை நிபுணர்களின் குழுவின் மூலம் கட்டிடக்கலை வடிவமைப்பு, பொறியியல் வடிவமைப்பு நிர்மாணங்கள், பராமரிப்பு, செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதன் ஊடாக ஆர்வமுள்ள

தரப்பினர்களிற்கு தரம், சிக்கனம், செயல்பாட்டுடைய மற்றும் முழுமையான திருப்திக்கான தொழில்நுட்ப பொறுப்புணர்வை உறுதி செய்து தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதன் மூலம் பொதுத்துறையின் கட்டிட வேலைகளை மேம்படுத்துவதற்கு மிகச்சிறந்த சேவைகளை வழங்குதல்.

4.1.1 செயலாற்றல்

நிதிப்பிரமாணம் 787 இன் பிரகாரம் அரசாங்கத்தின் அனைத்து நிர்மாணங்கள் மற்றும் வடிவமைப்பு வேலைகளை செயற்படுத்துதல் தொடர்பில் அரசாங்க வேலைத் திணைக்களமாகக் காணப்படுகின்ற கட்டிடத் திணைக்களம் பொறுப்புடையதாக காணப்படும் என்பது பொதுவான நிபந்தனையாகும். மேற்குறிப்பிட்ட பணிகள் மற்றும் ஏனைய நிர்மாண பணிகளை நிறைவேற்றுவதற்காக திணைக்களத்திடம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டிட நிர்மாண துறைசார்ந்த 70 சிரேஷ்ட தரத்திலுள்ள பொறியிலாளர்கள், 14 சிரேஷ்ட தரத்திலுள்ள கட்டிடவியலாளர்கள் உள்ளிட்ட 105 வடிவமைப்பாளர்கள், அளவுத்திட்ட வியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் காணப்பட்ட போதிலும், செயலாற்றலானது பின்வருமாறு நலிவான நிலையில் காணப்பட்டது.

(அ) ஆதனம் குடியிருப்பதற்கு பாதுகாப்பானது என்பதற்கான சான்றிதழ்களை வழங்குதல்.

2018 ஆகஸ்ட் 15 ஆந் தேதியிட்ட 2018 இன் 23 ஆம் இலக்க டியிருப்பு உரிமைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் உட்பிரிவு 3.(3)(1) இன் படி, குடியிருப்பு ஆதனங்கள் பதிவு செய்வதற்கு பாதுகாப்பானவை என்பதை உறுதி செய்யும் வகையில், கட்டடத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் குடியிருப்புகளை பதிவு செய்யும் போது எழுத்துப்பூர்வ அறிக்கையை வெளியிடுதல் வேண்டும். சட்டத்தின் பிரிவு 2 இன் படி, இந்தச் சட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து ஐந்தாண்டு காலத்திற்குள் இது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும், 2018 ஆகஸ்ட் 18 க்குள் கால அவகாசம் நிறைவடைந்திருந்ததுடன், திணைக்களம் செயற்படுதலில் காணப்பட்ட தாமதம் காரணமாக இந்த நடவடிக்கை முழுமை அடைந்திருக்கவில்லை.

(ஆ) எதிர்பார்த்த நிறைவு மட்டத்தை அடையாதுள்ள நிர்மாணச் செயற்திட்டங்கள்

(i) மன்னார், மடு கோயில் வளாகத்தில் தற்காலிக வீட்டுவசதி கட்டுமானத் திட்டம்

புனித யாத்திரைக்காக மடுவுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு குறைந்த செலவில் 300 வீடுகளை நிர்மாணிப்பதற்காக 2028 நவம்பர் 15 அன்று இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் ரூபா 300 மில்லியன் பெறப்பட்டது. இந்தத் திட்டத்திற்கான ஆலோசகராக கட்டிடத் திணைக்களம் நியமிக்கப்பட்டிருந்ததுடன் சுற்றுலா மேம்பாட்டு மற்றும் கிறிஸ்தவ மத விவகார அமைச்சகத்திற்கும் கட்டிடத் திணைக்களத்துக்கும் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

- கட்டிடங்கள் கட்டப்படும் நிலமானது நீர் தேங்கி நிற்கும் ஒரு சேற்று நிலம் என்பதும், கட்டுமானத்திற்கு முன்பு நிலம் ஆய்வு செய்யப்பட்டதாக அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. ஆரம்பத் திட்டத்தின் படி 25 இரண்டு மாடி கட்டிடங்களில் தலா 12 வீடுகளைக் கொண்ட 300 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கு திடமிடப்பட்டிருந்த போதிலும், பின்னர் இநதப்

பணியை ஒற்றை மாடி வீடுகளாக முடிக்க ஒப்புக்கொள்ளப்பட்டது, இதன் விளைவாக ஆரம்பத்தில் தொடங்கப்பட்ட வீடுகளின் அஸ்திவாரங்களில் தேவையற்ற செலவு ஏற்பட்டிருந்தது.

- பௌதீக ஆய்வின் போது, வேலை செய்யும் இடத்தில் கழுவப்பட்டு தயாரிக்கப்பட்ட மணல் கட்டிடங்கள் கட்டுவதற்கும் சிமென்ட் தொகுதிகள் தயாரிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டது கண்டறியப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆய்வகம் 2024 மார்ச் 09 அன்று நடத்திய ஆய்வின் போது, கட்டுமானத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட வெற்று சிமெந்துக் கற்கள் தேவையான அமுக்க வலிமையில் காணப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது. அதன்படி, இந்தக் கற்களைப் பயன்படுத்தி கட்டப்பட்ட கட்டிடங்கள் தேவையான தரத்தில் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், பிரதேச செயலாளரின் தலையீட்டின் மூலம் ஒப்பந்ததாரருக்கு போதுமான மணல் இருப்பு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், வழங்கப்பட்ட மணல் இருப்புக்கள் இந்த கட்டுமானங்களுக்குப் பயன்படுத்தப்படவில்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

- மூலப்பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் தொழிலாளர் போதுமான அளவு வழங்கப்படாததால், 2024 டிசம்பர் 31 க்குள் ஒப்புக் கொள்ளப்பட்டபடி திட்டத்தை முடிக்க முடியாது என்று கட்டிடத் திணைக்களம் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கும், வாடிக்கையாளர் நிறுவனத்திற்கும் தெரிவித்திருந்தாலும், அதற்கான தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- பௌதீக கணக்காய்வின் போது, 08 வீடுகளைக் கொண்ட 04 கட்டிட அலகுகள் லிண்டல் மட்டம் வரை சுவர்களைக் கொண்டிருந்துடன், மீதமுள்ள கட்டிடங்களுக்கு அடித்தளம் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தன என்பது அவதானிக்கப்பட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி முழுநேர ஊழியர்கள் மற்றும் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் பணி தளத்திற்கு அனுப்பப்படவில்லை என்பது 2024 டிசம்பர் 05 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட வெளிக்கள கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அதன்படி, நிதி முன்னேற்றம் மற்றும் பௌதீக முன்னேற்றம் என்பன முறையே 23 சதவீதம் மற்றும் 47 சதவீதம் ஆகும்.

(ii) பனைத் தொழிலை பல்வகைப்படுத்தவும், அதை ஒரு சுற்றுலா மையமாகப் பயன்படுத்தவும் ஒரு மாதிரி பனை பண்ணையை நிர்மாணித்தல் திட்டம்

பனைத் தொழிலை பல்வகைப்படுத்தவும், அதை ஒரு சுற்றுலா மையமாகப் பயன்படுத்தவும் ஒரு மாதிரி பனை பண்ணையை நிர்மாணித்தல் செயற்திட்டத்தைத் தொடங்குவதற்காக, பனை அபிவிருத்திச் சபை 2021 மார்ச் 31 அன்று கட்டிடத் திணைக்களத்தை ஆலோசனை நிறுவனமாகத் தேர்ந்தெடுத்திருந்தது.

- திட்டத்தின் கட்டுமானத்திற்கான பொறியியல் மதிப்பீடு ரூபா 18,029,000 ஆன போதிலும், திட்டத்திற்கான கூறுவிலைகளை அழைக்கும் செய்தித்தாள் விளம்பரத்தில் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா23 மில்லியன் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

- இரண்டு விலைமனுதாரரர்கள் மட்டுமே கூறுவிலைகளைச் சமர்ப்பித்திருந்ததுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட கூறுவிலைதாரரின் கூறுவிலையானது பொறியியல் மதிப்பீட்டை விட 9.58 சதவீதம் அதிகமாகவும், புதிய ஒப்பந்தின் மதிப்பு ரூபா 19,756,134 ஆகவும் இருந்தது. 2021 நவம்பர் 23 அன்று திணைக்களத்துக்கும் ஒப்பந்ததாரருக்கும் இடையே ஒப்பந்தங்கள் கையெழுத்தான போதிலும், ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதற்கு முன்பு சமர்ப்பிக்க வேண்டிய செயலாற்றல் பிணைமுறி ஏற்றுக்கொள்ளும் கடிதத்தின்படி சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- 2021 ஜூலை 26 அன்று, தலைமை பொறியாளர் வலய இல. 06, கட்டடக்கலை, கட்டமைப்பு, மின்சாரம் மற்றும் நீர் வழங்கல் திட்டங்களை வழங்குமாறு பணிப்பாளர் (பொறியியல் திட்டங்கள்) இடம் கோரியிருந்த போதிலும், 2021 நவம்பர் 03 க்குள் தொடர்புடைய திட்டங்களை வழங்காததால் திட்டத்தின் பணிகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை.

- ஒப்பந்ததாரர் 2022 ஜூலை 12 முதல் திட்ட கட்டுமானத்தை கைவிட்டிருந்ததுடன் தலைமை பொறியாளர் வலய இல. 06, ஆல் 2022 ஆகஸ்ட் 15 நிலவரப்படி கட்டுமான முன்னேற்றம் 30 சதவீதம் என்று தெரிவித்திருந்தார். அந்த நேரத்தில், திட்டத்தின் சான்றளிக்கப்பட்ட பணி மதிப்பு ரூபா 4,964,868 மதிப்புடையது என்றும், மறு கொள்முதல் செயல்முறைக்குப் பிறகு புதிய ஒப்பந்ததாரரால் திட்டம் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது என்றும், கட்டிட பணிப்பாளர் நாயகம் தனது 2022 அக்டோபர் 19 தேதியிட்ட 2-3-14-382 என்ற கடிதத்தின் மூலம் பெருந்தோட்டத் தொழில்கள் அமைச்சின் செயலாளருக்குத் தெரிவித்திருந்த போதிலும், திட்டப் பணிகள் 2024 செப்டம்பர் 02 வரை மீண்டும் தொடங்கப்பட்டிருக்கவில்லை.

- 2022 செப்டம்பர் 30 நிலவரப்படி, திட்டத்தின் கட்டுமானத்திற்காக கட்டிடத் திணைக்களத்துக்கு வழங்கப்பட்ட பணத்தில், மீதமுள்ள பணமாக ரூபா 12,677,762 இருந்ததுடன் இந்தப் பணம் கணக்காய்வுத் தேதியான 2024 செப்டம்பர் 02 வரை திணைக்களத்தின் வைப்பு கணக்கில் இருந்தது.

(iii) கொழும்பு நகர்ப்புற போக்குவரத்து கட்டிட கட்டுமானத் திட்டம்

2016 ஆகஸ்ட் 18 தேதியிட்ட 16/1676/702/003-XXVII ஆம் இலக்க அமைச்சரவை பத்திரம் மற்றும் 10/08/2016/10 ஆம் இலக்க அமைச்சரவை சுற்றறிக்கை மூலம், இலங்கை பொலிஸ் கட்டிட நிர்மாண மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களின் ஒரு பகுதியை கட்டிடத் திணைக்களத்துக்கு மாற்றுவதன் கீழ், நுகர்ர்புற போக்குவரத்து கட்டிடத்தின் கட்டுமானத்திற்கான மொத்த மதிப்பிடப்பட்ட செலவான ரூபா 376,587,327 இன் கீழ் அத்திட்டம் கட்டிடத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதன்படி, தேசிய போட்டி ஏல முறையின் அடிப்படையில் கொள்முதல் மேற்கொள்ளப்பட்டதுடன் ஒரே ஒரு ஒப்பந்த நிறுவனம் மட்டுமே ரூபா 416,589,070 தொகைக்கு ஏலத்தை சமர்ப்பித்திருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

- கொள்முதல் குழு 2017 மார்ச் இல் ஒப்பந்ததாரருடன் கலந்துரையாடல்களை நடத்தியதுடன் C2 தரம் அல்லது அதற்கு

மேற்பட்டது ஏலங்களைச் சமர்ப்பிப்பதற்கான தகுதி அளவுகோலாகும் என்றும் ஒப்பந்தம் வழங்கப்படும் நேரத்தில் அது செல்லுபடியாக காணப்படுதல் வேண்டுமென்று என்று கூறப்பட்டிருந்த போதிலும், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கையானது, ஒப்பந்ததாரர் 2017 பெப்ரவரி 18 வரை மட்டுமே செல்லுபடியாகும் CS2 தரத்தைக் கொண்டிருந்தார் என்று கூறியது. இந்தத் திட்டம் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட கொள்முதல் குழுக்களுக்கான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் குறைந்தபட்ச தகுதிகளைப் பூர்த்தி செய்யாத மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு, 2017 செப்டம்பர் 15 அன்று ரூபா 388,587,320 ஒப்பந்த மதிப்புக்கு ஒப்பந்தத்தை வழங்க பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

- கொள்முதல் வழிகாட்டுதல்களின் 3.12.2 இன் படி, ஒத்த ஒப்பந்தங்களில் ஏலதாரர்களின் அனுபவம் மற்றும் கடந்தகால செயல்திறன், நிதி ஆதாரங்கள் மற்றும் ஒப்பந்தத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கான ஏலதாரர்களின் திறன் மற்றும் வளங்கள் ஆகியவை முன் தகுதி அளவுகோல்களாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், ஏல மதிப்பீட்டு செயல்பாட்டில் இவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டதற்கான ஆதாரங்களை கணக்காய்வில் கண்டறியவில்லை.

- 2020 பெப்ரவரி 20 அன்று மேற்கு தெற்கு தலைமைப் பொறியாளரிடமிருந்து ஆலோசகருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின்படி, ஒப்புதல் இல்லாமல் ஸ்லாப், பீம்கள், நெடுவரிசைகள், லிஃப்ட் சுவர் ஆகியவற்றிற்கு வேறு வகையான உருக்குக் கம்பிகள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் ஏழாவது மாடியில் கான்கிரீட் வேலை ஏற்கனவே முடிக்கப்பட்டுள்ளது. பணிக்காக வழங்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட தரமான 25 மிமீ கம்பிகளும் பழையவை என்பதுடன் அரிக்கப்பட்டவை என்பதும் கண்டறியப்பட்டது. அங்கீகரிக்கப்படாத இரும்பு கம்பியைப் பயன்படுத்தி கட்டப்படும் கட்டிடத்தின் தரம் மற்றும் நீடித்துழைப்பு குறித்து கணக்காய்வில் திருப்தி அடைய முடியவில்லை.

- ஒப்பந்த நிறுவனத்தின் வெளிநாட்டு பங்காளியின் விலகல் மற்றும் ஒப்பந்த நிறுவனத்தின் வங்கரோத்து நிலை காரணமாக ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டதுடன், அந்த நேரத்தில் பௌதீக முன்னேற்றம் 46 சதவீதம் மட்டுமே இருந்தது.

4.1.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பொது நிதி முகாமைத்துவச் சட்டத்தின் துணைப்பிரிவு 47 (4) இன் படி, நிதியாண்டு முடிவடைந்த 180 நாட்களுக்குப் பிறகு அல்லது அதற்கு முன்னதாக வருடாந்த செயலாற்றல் அறிக்கை வெளியிடப்பட வேண்டுமென்பதுடன் 2020 ஆகஸ்ட் 28 ஆம் தேதியிட்ட பொது நிதி சுற்றறிக்கை இல. 2/2020 இன் பந்தி 10 (02) இன் படி பொது நிதித் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல் இல. 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள வடிவமைப்பின் படி வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 16 (02) இன் படி வருடாந்த நிதி அறிக்கையுடன் கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

4.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

(அ) நுவரெலியா சுற்றுலா விடுதி அமைந்துள்ள காணியின் ஒரு பகுதி அங்கீகரிக்கப்படாத நபர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதுடன் மேற்படி காணியின் அளவீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு உரிமைப் பத்திரங்களை பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) திணைக்களத்திற்குச் சொந்தமான தியத்தலாவ காணி பிரதேச செயலாளரினால் சுவீகரிக்கப்பட்டுள்ளதுடன், அதற்குப் பதிலாக ஹப்புத்தளை இப்பன் ஆர பிரதேசத்தில் காணி வழங்கப்படவுள்ளதாக அறிவித்துள்ள போதிலும், அதற்கான உறுதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.3 முகாமைத்துவ பலவீனங்கள்

(அ) அரசு அதிகாரிகளின் முற்பண நிலுவை

i. 2017 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் ஓய்வு பெற்ற இரண்டு அதிகாரிகளிடமிருந்து வர வேண்டிய ரூபா 115,861 மற்றும் ரூபா 151,215 இதுவரை வசூலிக்கப்படவில்லை.

ii. 2023 ஆம் ஆண்டில் இடைநீக்கம் செய்யப்பட்ட ஒரு அதிகாரியிடமிருந்து ரூபா 330,234 மீதியை வசூலிக்கவிருந்த போதிலும், அந்தக் கடன் நிலுவையை வசூலிக்க இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

iii. 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் சேவையை விட்டு வெளியேறிய ஒரு அதிகாரியிடமிருந்து ரூபா 121,439 மீதியை வசூலிக்க வேண்டியிருந்ததுடன் அதனை உத்தரவாததாரர்களிடமிருந்தேனும் வசூலிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(ஆ) குத்தகைக் காலம் முடிவடைந்த போதிலும், குத்தகைத் திட்டத்தின் கீழ் வாங்கப்பட்ட ரூபா 30.4 மில்லியன் மதிப்புள்ள 04 வாகனங்களை, திணைக்களம் கையகப்படுத்தவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

5. நிலைபேறான அபிவிருத்தி

ஒவ்வொரு அரசாங்க நிறுவனமும் ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான நிகழ்ச்சி நிரல் 2030 உடன் இணங்கியொழுக வேண்டியது அவசியமாவதுடன், மதிப்பாய்வு செய்யப்படும் ஆண்டில், 2030 ஆம் ஆண்டுக்குள் உலகின் எரிசக்தி ஆதாரங்களில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் பங்கை அதிகரிக்கும் நோக்கில், புதிதாக கட்டப்பட்ட மற்றும் நவீனமயமாக்கப்பட்ட அனைத்து அரசு கட்டிடங்களும் சூரிய சக்தியைப் பயன்படுத்தி புதுப்பிக்கத்தக்க ஆற்றலை உருவாக்கும் வசதிகளுடன் பொருத்தப்பட்டு, அவற்றின் எரிசக்தி தேவைகளில் 25 சதவீதத்தை பூர்த்தி செய்ய வேண்டும்.

இந்த இலக்குகளை அடைவதற்கான பின்வரும் முக்கிய நடவடிக்கைகள் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதிக்குள் செயல்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(அ) புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரமாக சூரிய சக்தியைப் பயன்படுத்துவது குறித்து வாடிக்கையாளர் நிறுவனத்திற்குக் கல்வி கற்பித்தல் மற்றும் அதன் மூலம் முன்மொழியப்பட்ட கட்டிடத்தின் ஆற்றல் தேவையின் ஒரு பகுதியை பூர்த்தி செய்தல்.

(ஆ) சூரிய பேனல்களை நிறுவுவதற்கான எளிமை மற்றும் இடத்தை விரிவுபடுத்துதல், அடிப்படை கட்டிட வடிவமைப்பின் ஒருங்கிணைந்த பகுதியாக அளவுகோல்களை அமைத்தல்.

(இ) அனைத்து அரசு கட்டிடங்களின் ஆற்றல் தேவையின் ஒரு பகுதியை சூரிய சக்தியைப் பயன்படுத்தி பூர்த்தி செய்ய வேண்டும் என்ற சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை இயற்றுவதற்கு முதன்மையாக பங்களித்தல்.

6. மனித வள முகாமைத்துவம்

6.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உண்மையான பதவியணியினர் மற்றும் ஆளனிக்கான ஊதியச் செலவினம்

2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரித்த, உள்ளபடியான மற்றும் வெற்றிடமாக உள்ள பதவியணியினர் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

ஊழியர் வகை	**அங்கீகரித்த எண்ணிக்கை**	**உள்ளபடியான எண்ணிக்கை**	**வெற்றிடங்களின் எண்ணிக்கை**
சிரேஷ்ட மட்டம்	126	97	29
மூன்றாம் மட்டம்	24	03	21
இரண்டாம் மட்டம்	309	249	60
முதலாம் மட்டம்	178	134	44
மொத்தம்	637	483	154

154 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது தேவைக்கேற்றபடி பதவியணியினர் எண்ணிக்கையை திருத்துவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

ஒப்பம்: எச்.ஏ.டீ. சாந்தனி அபேசிங்ஹ
சிரேஸ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (ப.க.) இற்காக

அத்தியாயம் 04 – செயலாற்றல் குறிகாட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றல் குறிகாட்டிகள் (செயல் நடவடிக்கைத்திட்டத்தின் அடிப்படையில்)

குறித்துரைத்த குறிகாட்டிகள்	எதிர்பார்க்கப்படும் வெளியீட்டின் சதவீதமாக (மு) உண்மையான வெளியீடு			
	100%- 90%	75%- 89%	50%- 74%	50 % குறைந்தவை
ஸ்கெட்ச் வடிவமைப்புகள்		76.6%		
வடிவமைப்பு குறிப்புகள் உருவாக்கம்		83.3%		
முடிக்கப்பட்ட செயற்திட்டங்கள் (எண்ணிக்கை)	92%			
பெறுமதி அடிப்படையில் முடிக்கப்பட்ட செயற்திட்டங்கள்		77%		
பெறுமதி அடிப்படையில் முடிக்கப்பட்ட் பராமிரிப்பு	100%			
பெறுமதி அடிப்படையில் முடிக்கப்பட்ட் திட்ட மேலாண்மை			72%	

அத்தியாயம் 05- நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைதல் (SDG) செயலாற்றல்

	குறிக்கோள்	இலக்கு	குறிகாட்டி	முன்னேற்றம்
01	2024 க்குள் 05 வாடிக்கையாளர் நிறுவனங்களுக்கு கூரையின் பரப்பிற்கு ஏற்ப சோலார் பேனல்களுக்கான விவரக்குறிப்புகள் மற்றும் தோராயமான மதிப்பீடுகளைத் தயாரித்தல் - SDG 07	சூரிய சக்தியைப் பயன்படுத்தி புதுப்பிக்கத்தக்க ஆற்றலை உற்பத்தி செய்வதன் மூலம் மின்சாரத் தேவையைக் குறைத்தல்	கோரிய வாடிக்கையாளர் நிறுவனங்களுக்கு சோலார் பேனல்களை நிறுவுதல்	**1. மாவட்ட செயலகம், ஹோமாகம** பொறியியல் மதிப்பீடு. வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப விவரக்குறிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டன. வாடிக்கையாளரால் டெண்டர்கள் அழைக்கப்படுகின்றன. ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ளன. **2. தபால் கட்டிடம்,** பொலன்னறுவை பொறியியல் மதிப்பீடு, வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப விவரக்குறிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டது. கட்டிடங்கள் திணைக்களம் (CEZA) மூலம் டெண்டர்கள் அழைக்கப்படுகின்றன. 3. **அம்பாறை பொது வைத்தியசாலை சுற்றுலா பங்களா** பொறியியல் மதிப்பீடு, வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப விவரக்குறிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டது. கட்டிடத் திணைக்களம் (CEZ4) மூலம் டெண்டர்கள் அழைக்கப்படுகின்றன. **4. நீதிமன்ற வளாகம், தெல்தெனிய** பொறியியல் மதிப்பீடு, வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப விவரக்குறிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டது. மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டது 5. **இலங்கை ஊக்கமருந்து எதிர்ப்பு நிறுவனம்** பொறியியல் மதிப்பீட்டை சமர்ப்பித்துள்ளது. மதிப்பீடு அங்கீகரிக்கப்படவில்லை.

அத்தியாயம் 06 - மனித வள விவரம்

6.1 பதவியணி முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	தற்போதுள்ள பதவியணி	அமைய/ஒப்பந்தம்	வெற்றிடங்கள்.∴ (மேலதிகம்)
சிரேஷ்ட நிலை	126	97	0	29
மூன்றாம் நிலை	24	3	0	21
இரண்டாம் நிலை	309	249	0	60
ஆரம்ப நிலை	178	134	3	44
மொத்தம்	637	483	3	154

6.2 மனித வளங்களின் பற்றாக்குறை அல்லது மிகையானது நிறுவனத்தின் செயலாற்றலை எவ்வாறு பாதித்துள்ளது என்பதை சுருக்கமாகக் குறிப்பிடுதல்

- அரசு கட்டுமானத் துறையின் சார்பில் கட்டிடத் திணைக்களமானது பெரும் பங்கு வகிப்பதுடன் பல அரசு கட்டிடங்களில் பராமரிப்புப் பணிகளைச் செய்கிறது.

- தொழில்நுட்ப பணியாளர்கள் பற்றாக்குறையால் திட்டங்களை செயல்படுத்துவதில் பல சிரமங்கள் உள்ளன.

- 2024.12.31 நிலவரப்படி திணைக்களத்துக்கான 637 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 486 ஊழியர்கள் மட்டுமே பணிபுரிகின்றனர்.

- தேவையான தொழில்நுட்ப பணியிடங்கள் அல்லது பதவிகளை நிரப்புவதற்கு தேவையான ஒப்புதல்கள் மற்றும் பணியாளர்கள் கிடைத்தால், திட்ட செயல்பாடுகள் மிகவும் திறமையாக மேற்கொள்ளப்படும்.

6.3 மனித வள அபிவிருத்தி

இல.	பயிற்சித் திட்டத்தின் பெயர்	பயிற்றுவிக்கப்படடோர் எண்ணிக்கை	பயிற்றுவிக்கப்படடோர் எண்ணிக்கை	மொத்த முதலீடு (ரூபா)		திட்டத்தின் தன்மை- வெளி நாடு/ உள்நாடு	திட்டத்தின் தன்மை- வெளி நாடு/ உள்நாடு
				உள்நாடு	வெளி நாடு		
1	சான்று அடிப்படையில் தீர்மானமெடுத்தல் பாடநெறி – பயிற்சிக்கான ஆராய்ச்சி	01	01 நாட்கள்	இலவச பாடநெறி		உள்நாடு	
2	கட்டிட சேவைகள் பொறியியல் Msc. டிப்ளமோ திட்டம் 2023/2024	01	02 ஆண்டு	200,000.00		உள்நாடு	
3	கட்டமைப்பு பொறியியலில் முதுகலை திட்டம்	01	02 ஆண்டு	50,000.00		உள்நாடு	
4	திட்ட மேலாண்மை நிபுணத்துவ (PMP) சான்றிதழ் CPD பாடநெறி - அறிவுப் பகிர்வு எண்.02	13	01 நாட்கள்	இலவச பாடநெறி		உள்நாடு	
5	கட்டடங்களில் செங்குத்து போக்குவரத்து அமைப்புகள் (VTS)-2024 CPD	01	13 நாட்கள்	23,500.00		உள்நாடு	
6	செயற்திட்ட முகாமைத்துவம் குறித்த Msc பாடநெறி	01	01 ஆண்டு	204,900.00		உள்நாடு	
7	ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் 7வது இணைக்கப்பட்ட ஒவ்வாமை நோயெதிர்ப்பு மற்றும் உயிரணு உயிரியல் பிரிவை நிறுவுதல்	05	01 நாட்கள்	இலவச பாடநெறி		உள்நாடு	
8	டெஸ்க்டாப் டேட்டா மேனேஜ்மென்ட் குறித்த பட்டறை (எம்எஸ் அணுகல்)	02	02 நாட்கள்	26,000.00		உள்நாடு	
9	அரசாங்கத்திற்கு அரசாங்கத்திற்கு (பு2பு) பரிமாற்றம் மற்றும் இலங்கையில் நீர் சூழலை மேம்படுத்துதல் தொடர்பான ஜப்பானிய ஜோகாசு கருத்தரங்கு	04	01 நாட்கள்	இலவச பாடநெறி		உள்நாடு	
10	AutoCAD ஐப் பயன்படுத்தி கணினி உதவியுடன் வரைதல் மற்றும் 3னு மாடலிங் பற்றிய பயிற்சி	01	12 நாட்கள்	30,000.00		உள்நாடு	
11	2004 இலங்கை பொறியாளர்கள் நிறுவனம் (IESL) ஏற்பாடு செய்த தேசிய பொறியியல் மாநாடு	05	01 நாட்கள்	இலவச பாடநெறி		உள்நாடு	
12	கட்டுமானத் துறையில் ஒப்பந்ததாரர்கள் வேலையின் விலை ஏற்ற இறக்கம்	09	01 நாட்கள்	36,000.00		உள்நாடு	
13	தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி	14	01 நாள	இலவச பாடநெறி		உள்நாடு	
14	கட்டிட கட்டுமான தொழில்நுட்பத்தின் அடிப்படைகள் குறித்த ஒரு நாள் கருத்தரங்கு	06	01 நாட்கள்	30,000.00		உள்நாடு	

இல.	பயிற்சித் திட்டத்தின் பெயர்	பயிற்றுவிக்கப்பட்டோர் எண்ணிக்கை	திட்டத்தின் காலம்	மொத்த முதலீடு (ரூபா)		திட்டத்தின் தன்மை- வெளி நாடு/ உள்நாடு	வெளியீடு/ பெறப்பட்ட அறிவு
				உள்நாடு	வெளிநாடு		
15	நிர்வாக அதிகாரி திறன் மேம்பாடு	01	03 நாட்கள்	15,000.00		உள்நாடு	
16	அலுவலக உதவியாளர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள்	02	02 நாட்கள்	26,000.00		உள்நாடு	
17	மேய்மையாய்வுச் சபை, நட்டம் மற்றும் பதிவழிப்பு	01	02 நாட்கள்	13,000.00		உள்நாடு	
18	பாலின அடிப்படையிலான வன்முறை மற்றும் குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம்	04	01 நாட்கள்	இலவச பாடநெறி		உள்நாடு	
19	இலங்கையில் கட்டுமான ஒப்பந்தங்கள் ' சட்டம் மற்றும் தகராறு தீர்வு நடைமுறை குறித்த ஒரு நாள் கருத்தரங்கு	05	01 நாட்கள்	25,000.00		உள்நாடு	
20	தகவல் அறியும் உரிமை திட்டம்	08	01 நாட்கள்	20,000.00		உள்நாடு	
21	வேலை உற்பத்தித்திறனுக்கான Google Apps மற்றும் AI கருவிகள் பற்றிய பட்டறை	04	01 நாட்கள்	30,000.00		உள்நாடு	
22	கான்கிரீட் கலவை வடிவமைப்பு	01	02 நாட்கள்	25,000.00		உள்நாடு	
23	CPD பாடநெறி "உடல்நலப் பயன்பாடுகளுக்கான சிறப்பு HVAC வடிவமைப்பு -2024"	01	02 நாட்கள்	10,600.00		உள்நாடு	
24	கட்டுமானப் பாதுகாப்பு குறித்த ஒரு நாள் கருத்தரங்கு	02	01 நாள	10,000.00		உள்நாடு	
25	கட்டுமான சட்டம் மற்றும் தகராறு தீர்வு திட்டம் Msc பாடநெறி	01	01 ஆண்டு	125,000.00		உள்நாடு	
26	எஃகு கூரை பற்றிய தொழில்நுட்ப கருத்தரங்கு	44	01 நாட்கள்	-		உள்நாடு	
27	தமிழ் மொழி பயிற்சி திட்டம்	21	70 மணி	52,500.00		உள்நாடு	
28	புதுமை மற்றும் முன் பதிவு மதிப்பீடு மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான ஸ்டார்ட்அப் ப்ரோமோஷன் இந்தியா திட்டம்	01	20 நாட்கள்	-		உள்நாடு	
29	2024 ஆம் ஆண்டுக்கான இந்திய அரசின் வெளியுறவு அமைச்சகத்தின் இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு (ITEC) உதவித்தொகை திட்டத்தின் கீழ் பயிற்சி இடங்கள் (ஆன்லைன் - குறுகிய கால)	01	13 நாட்கள்	-		உள்நாடு	
30	வாழ்விடம் III இந்தியாவின் புதிய நகர்ப்புற நிகழ்ச்சி நிரல் கொள்கை, திட்டமிடல் மற்றும் பயிற்சித் திட்டத்தின் பின்னணியில் போதுமான வீட்டுவசதிக்கான உரிமையை உணர்தல்	01	19 நாட்கள்	-		உள்நாடு	

மனித வள அபிவிருத்தி சுருக்கமாக

சேவை வகை	பணியர்ளர்களின எண்ணிக்கை	மொத்த முதலீடு (ரூபா)	
		உள்நாடு	வெளிநாடு
பொறியாளர்	77	494,600.00	-
நிர்வாகம்	1	-	-
உள் தணிக்கை	1	-	-
கட்டிடக்கலை	11	204,900.00	-
வடிவமைபப்பாளர் (தொழில்நுட்பம)	10	30,000.00	-
நிர்வாக அத்காரி (சிறப் பு)	1	15,000.00	-
தொழில்நுட்ப அதிகாரி (தொழில்நுட்பம்)	28	67,500.00	-
அபிவிருத்தி உத்தியோகத்தர்	4	39,000.00	-
முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்	4	-	-
முதலாந்தரம் நிபுணத்துவம் அல்லாதோர்	23	78,500.00	-
அளவுத்திட்ட பகுப்பாளர் (தொழில்நுட்பம்)	2	23,000.00	-

அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை

இல.	பிரயோகித்தக்க தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலை (இணங்குதல்/ இணங்காமை)	இணங்காமைக் கு சுருக்கமான விளக்கம்	எதிர்காலத்தில் இணக்கமின்மையை தவிர்ப்பதற்கு பிரேரித்த திருத்த நடவடிக்கைகள்
01	**பின்வரும் நிதிக் கூற்றுக்கள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன**			
1.1	வருடாந்த நிதிக் கூற்றுக்கள	இணங்கப்பட்டது		
1.2	அரசாங்க உத்தியோகத்தர் முற்பணக் கணக்குகள	இணங்கப்பட்டது		
1.3	வர்த்தக மற்றும் உற்பத்தி முற்பண கணக்குகள் (வணிக முற்பண கணக்குகள்)	தொடர்பற்றது		
1.4	களஞ்சிய முற்பணக் கணக்குகள்	தொடர்பற்றது		
1.5	விசேட முற்பணக் கணக்குகள	தொடர்பற்றது		
1.6	ஏனையவைகள்	தொடர்பற்றது		
02	**புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பராமரித்தல் (நி.பி. 445)**			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 267/2018 இன் அடிப்படையில் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டு புதுப்பிக்கப்பட்டது	இணங்கப்பட்டது		
2.2	தனிப்பட்ட ஊதியப் பதிவேடு / தனிப்பட்ட ஊதிய அட்டைகள் பேணப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளன	இணங்கப்பட்டது		
2.3	கணக்காய்வு ஐயவினா பதிவேடு பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது	இணங்கப்பட்டது		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கை களின் பதிவேடு பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது	இணங்கப்பட்டது		
2.5	அனைத்து மாதாந்த கணக்கு பொழிப்புகள் (ஊஜபுயுளு) தயாரிக்கப் பட்டு, உரிய திகதியில் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்படுதுல்	இணங்கப்பட்டது		
2.6	காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளன.	இணங்கப்பட்டது		

இல.	பிரயோகித்தக்க தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலை (இணங்குதல்/ இணங்காமை)	இணங்காமைக்கு சுருக்கமான விளக்கம	எதிர்காலத்தில் இணக்கமின்மையை தவிர்ப்பதற்கு பிரேரித்த திருத்த நடவடிக்கைகள்
2.7	இருப்புப் பதிவேடு பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது	இணங்கப்பட்டது		
2.8	பொருளிருப்பு பதிவேடு பராமரிக்கப் பட்டு புதுப்பிக்கப்பட்டது.	இணங்கப்பட்டது		
2.9	இழப்புக்கள் பதிவேடு பராமரிக்கப் பட்டு புதுப்பிக்கப்பட்டது	இணங்கப்பட்டது		
2.10	கடப்பாட்டுப் பதிவேடு பராமரிக்கப் பட்டு புதுப்பிக்கப்பட்டது	இணங்கப்பட்டது		
2.11	அடியிதழ் புத்தகங்கள் பதிவேடு (புயு – 20) பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது	இணங்கப்பட்டது		
03	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான தொழிற்பாட்டு அதிகாரங்களை பகிர்ந்தளித்தல். (நி.பி. 135)**			
3.1	நிதி அதிகாரம் நிறுவனத்திற்குள் ஒப்படைக்கப்பட்டது.	இணங்கப்பட்டது		
3.2	நிதி அதிகாரக் கையளிப்புகள் நிறுவனத்திற்குள் தெரிவிக்கப்படுதல	இணங்கப்பட்டது		
3.3	இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் ஊடாக கொடுக் கல் வாங்கல்கள் பரீட்சிக்கப்படும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.	இணங்கப்பட்டது		
3.4	2014.05.01 ஆந் தேதியிட்ட அரச கணக்கு சுற்றறிக்கை இல. 171/2004 இன் அடிப்படையில் அரசு ஊதியம் வழங்கும் மென்பொருள் தொகுப்பைப் பயன்படுத்துவதன் %லம் கட்டுப்பாடுகள் பின்பற்றப்பட் டன.	இணங்கப்பட்டது		
04	**வருடாந்த திட்டங்களை தயாரித்தல்**			
4.1	ஆண்டுக்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டது.	இணங்கப்பட்டது		
4.2	ஆண்டுக்கான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.	இணங்கப்பட்டது		
4.3	ஆண்டுக்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.	இணங்கப்பட்டது		
4.4	வருடாந்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உரிய திகதியில் தே.பா.தி. இற்கு சமர்ப்பிக்கப்பட்டது	இணங்கப்பட்டது		
4.5	வருடாந்த காசுப் பாய்ச்சல் உரிய திகதியில் திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படல	இணங்கப்பட்டது		

இல.	பிரயோகித்தக்க தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலை (இணங்குதல்/ இணங்காமை)	இணங்காமைக்கு சுருக்கமான விளக்கம்	எதிர்காலத்தில் இணக்கமின்மையை தவிர்ப்பதற்கு பிரேரித்த திருத்த நடவடிக்கைகள்
05	**கணக்காய்வு ஐயவினாக்கள்**			
5.1	கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் விதிக்கப்பட்ட குறிப்பிட்ட நேரத்திற்குள் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிலளிக்கப் பட்டுள்ளன	இணங்கப்பட்டது		
06	**உள்ளக கணக்காய்வு**			
6.1	உள்ளக கணக்காய்வுத் திட்டம் நிதி பிரமாணம் 134(2)னுஆயு.ஃ.1-2019 இன் அடிப்படையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியை கலந்தா லோசித்த பிறகு ஆண்டின் தொடக்கத்தில் தயாரிக்கப்பட்டது	இணங்கப்பட்டது		
6.2	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத் திற்குள் பதில் அளிக்கப்பட்டது	இணங்கப்பட்டது		
6.3	உள்ளக கணக்காய்வு அறிக்கை களின் பிரதிகள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப் பிரிவு 40(4) இன் விதிமுறைகளின் படி முகாமைத்துவத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	இணங்கப்பட்டது		
6.4	உள்ளக கணக்காய்வு அறிக்கை களின் பிரதிகள் நிதி ஒழுங்குமுறை 134(3) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	இணங்கப்பட்டது		
07	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			
7.1	1-2019 ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வு திணைக்களத்தின் சுற்றறிக்கைக்கு இணங்க ஆண்டிற்கு குறைந்தபட்சம் 04 கூட்டங்கள் நடைபெற்றது	இணங்கப்பட்டது		
08	**சொத்து முகாமைத்துவம**			
8.1	சொத்துக் கொள்வனவுகள் மற்றும் அகற்றல்கள் பற்றிய விபரங்கள் 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் படி கட்டுப்பாட்டாளர் ஆணையாளரின் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.	இணங்கப்பட்டது		
8.2	சுற்றறிக்கை ஏற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு பொருத்தமான உரிமம் வழங்கும் அதிகாரி நியமிக்கப்பட்டு பரிந்துரைக்கப்பட்ட அதிகாரியின் விவரங்கள் மேலே கூறப்பட்ட சுற்றறிக்கையின் பந்தி 13 இன் அடிப்படையில் கட்டுப்பாட்டு ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது.	இணங்கப்பட்டது		

இல.	பிரயோகித்தக்க தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலை (இணங்குதல்/ இணங்காமை)	இணங்காமைக்கு சுருக்கமான விளக்கம்	எதிர்காலத்தில் இணக்கமின்மையை தவிர்ப்பதற்கு பிரேரித்த திருத்த நடவடிக்கைகள்
8.3	பொருள் மெய்மையாய்வு நடாத்தப் பட்டு 05/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்திடம் உரிய அறிக்கைகள் குறித்த திகதியில் சமர்ப்பிக்கப்பட்டது.	இணங்கப்பட்டது		
8.4	பொருள் மெய்மையாய்வு மூலம் கூட்டிக்காட்டப்பட்ட அதிகப்படியான மற்றும் பற்றாக்குறைகள் மற்றும் பிற தொடர்புடைய பரிந்துரைகள் தொடர் பில் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ள காலப்பகுதியில் நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டன.	இணங்கப்பட்டது		-
8.5	கைதவிர்க்கப்பட வேண்டிய விடயங் களை அகற்றுவதற்கு நி.பி. 772 இன் அடிப்படையில் நடவடிக்கை எடுத்தல்.	இணங்கப்பட்டது		
9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழாம் வாகனங்களிற்கான நாளாந்த வாகன ஓட்டப் பதிவேடுகள் மற்றும் மாதாந்த பொழிப்புகள் தயாரிக்கப்ப ட்டு உரிய தேதியில் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டன	இணங்கப்பட்டது		
9.2	அகற்றப்பட வேண்டிய வாகனங்கள் 06 மாதத்திற்கும் குறைவான காலத்திற்குள் அகற்றப்படுதல்	இணங்கப்பட்டது		
9.3	வாகன பதிவு புத்தகம் பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது	இணங்கப்பட்டது		
9.4	ஒவ்வொரு வாகன விபத்துக்கும் நி.பி. 103இ 104இ 109 மற்றும் 110 விதிமுறைகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது	இணங்கப்பட்டது		
9.5	29.12.2016 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்கம் பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் படி வாகனங்களின் எரிபொருள் நுகர்வு மீண்டும் சோதிக்கப்பட்டது	இணங்கப்பட்டது		
9.6	குத்தகைக்கு விடப்பட்டவரின் முழுமையான உரிமையானது குத்த கை காலத்திற்குப் பிறகு வாகன பதிவு புத்தக உரித்தாளருக்கு மாற்றப்பட்டன	இணங்கப்பட்டது		
10	**வங்கி கணக்குகளின் முகாமைத்துவம**			
10.1	வங்கி கணக்கிணக்க கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு, சான்றளிக்கப்பட்டு, உரிய தேதிக்குள் கணக்காய்விற்கு தயாராக்கப்பட்டது	இணங்கப்பட்டது		
10.2	செயலற்ற கணக்குகள் மீளாய்வு ஆண்டில் அல்லது முந்தைய ஆண்டுகளில் தீர்க்கப்பட்டன	இணங்கப்பட்டது		

இல.	பிரயோகித்தக்க தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலை (இணங்குதல்/ இணங்காமை)	இணங்காமைக்கு சுருக்கமான விளக்கம	எதிர்காலத்தில் இணக்கமின்மையை தவிர்ப்பதற்கு பிரேரித்த திருத்த நடவடிக்கைகள்
11	**நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு**			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகள் எல்லை மீறாமல் செலவழிக்கப்பட்டது	இணங்கப்பட்டது		
11.2	நி.பி. 94(1) இன் படி ஆண்டின் இறுதியில் நிதி ஏற்பாடுக்கு மேலாக பொறுப்புகள் இல்லை	இணங்கப்பட்டது		
12	**அரச உத்தியோகத்தர் முற்பணங்கள் கணக்கு**			
12.1	எல்லைகள் கடைபிடிக்கப்பட்டது	இணங்கப்பட்டது		
12.2	கடன்கள் மற்றும் நிலுவைகள் மீது காலப் பகுப்பாய்வு மேற்கொள்ளப் பட்டது.	இணங்கப்பட்டது		
13	**பொது வைப்பு கணக்கு**			
13.1	காலாவதியான வைப்புகளை அகற்றுவது தொடர்பாக நி.பி. 57 (1) இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டது.	இணங்கப்பட்டது		
13.2	பொது வைப்புக்கள் கட்டுப்பாட்டு பதிவேடு நாளதுவரையாக பேணப்பட்டு புதுப்பிக்கப்பட்டது	இணங்கப்பட்டது		
14	**கட்டுநிதிக் கணக்கு**			
14.1	ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் உள்ள மீதி வுளூர்னு இற்கு அனுப்பப்பட்டது	இணங்கப்பட்டது		
14.2	நி.பி. 371 இன் பிரகாரம் வழங்கப்பட்ட தற்காலிக உப கட்டுநிதிகள் பணி முடிந்த ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்பட்டது.	இணங்கப்பட்டது		
14.3	நி.பி. 371 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்குள் தற்காலிக உப கட்டுநிதிகள் வழங்கப்பட்டன	இணங்கப்பட்டது		
14.4	கட்டுநிதிக் கணக்கின் மீதிகள் திறைசேரிப் புத்தகத்துடன் மாதாந் தம் கணக்கிணக்கம் செய்யப்பட்டது	இணங்கப்பட்டது		
15	**வருமானக் கணக்கு**			
15.1	ஏனைய பிரமாணங்களின் பிரகாரம் வருமானத்திலிருந்து மீளப் பெறுதல்கள் செய்யப்பட்டது	தொடர்பற்றது		
15.2	வருமானச் சேகரிப்புகள் வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்படாமல் நேரடியாக வருவாய்க் கணக்கில் செலவு வைக்கப்பட்டமை	தொடர்பற்றது		
15.3	நி.பி. 176 இன் படி நிலுவை வருமானத்தின் மீளளிப்புகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டன.	தொடர்பற்றது		

இல.	பிரயோகித்தக்க தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலை (இணங்கப்பட்டது/இணக்கமின்மை)	இணக்கமின்மைக்கு சுருக்கமான விளக்கம்	எதிர்காலத்தில் இணக்கமின்மையை தவிர்ப்பதற்கு பிரேரித்த திருத்த நடவடிக்கைகள
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	ஊழியர்களுக்கான ஊதியம் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பிற்கு செலுத்தப்பட்	இணங்கப்பட்டது		
16.2	ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களும் எழுத்துப்பூர்வமாக கடமைகள் ஒப்படைக்கப்பட்டது	இணங்கப்பட்டது		
16.3	20.09.2017 தேதியிட்ட 04/2017 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை இன் படி சகல அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன	இணங்கப்பட்டது		
17	**பொது மக்களுக்கு தகவல்களை வழங்குதல்**			
17.1	தகவல் அறியும் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறையின் அடிப்படையில் ஒரு தகவல் வழங்கும் அதிகாரி நியமிக்கப்பட்டு, உரியவாறு தகவல் பதிவேடு பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்படுகிறது.	இணங்கப்பட்டது		
17.2	நிறுவனம் பற்றிய தகவல்கள் பொதுமக்களுக்கு இணையதளம் அல்லது மாற்று நடவடிக்கைகள் மூலம் வழங்கப்பட்டு, இந்த இணையதளம் அல்லது மாற்று நடவடிக்கைகளால் பொது அதிகாரத்திற்கு எதிரான பாராட்டுகள் / குற்றச்சாட்டுகளை தெரிவிக்க பொதுமக்களுக்கு வசதி செய்யப்பட்டுள்ளமை	இணங்கப்பட்டது		
17.3	தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 08 மற்றும் 10 இன் படி இரு ஆண்டு மற்றும் வருடாந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன	இணங்கப்பட்டது		
18	**குடிமக்கள் சாசனத்தை நடைமுறைப்படுத்துதல்**			
18.1	பொதுநிர்வாகம் மற்றும் முகாமைத் துவ அமைச்சின் சுற்றறிக்கை இல. 05/2008 மற்றும் 05/2018(1) ஆகியவற்றின அடிப்படையில் நிறுவன த்தால் ஒரு குடிமக்கள் சாசனம்/ குடிமக்கள் வாடிக்கையாளர் சாசனம் உருவாக்கப்பட்டு செயற்படுத்தப ட்டது.	இணங்கப்பட்டது		
19	**மனித வள திட்டத்தை தயாரித்தல்**			
19.1	02/2018 ஆம் இலக்க 24.01.2018 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கையின் இணைப்பு 02 இல் உள்ள படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது	இணங்கப்பட்டது		
19.2	மேற்கூறிய மனிதவளத் திட்டத்தில், ஒவ்வொரு ஊழியர்களுக்கும் வருடத்திற்கு குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி உறுதி செய்யப்பட்டுள்ளது	இணங்கப்பட வில்லை.	பயிற்சி செலவினத் தலைப்பின் கீழ் போதிய நிதி இல்லாமை	

இல.	பிரயோகித்தக்க தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலை(இணங்கு தல்/ இணங்காமை)	இணங்காமைக்கு சுருக்கமான விளக்கம	எதிர்காலத்தில் இணக்கமின்மையை தவிர்ப்பதற்கு பிரேரித்த திருத்த நடவடிக்கைகள்
19.3	மேற்படி சுற்றறிக்கையின் இணைப்பு 01 இலுள்ள படிவத்திற்கு அமைய அனைத்து உத்தியோகத்தர்களிற்கும் வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன.	இணங்கப்பட்டது		
19.4	மனித வள அபிவிருத்தி திட்டத்தை தயாரிப்பதற்காக சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு அவருக்கு கடமைகள் பொறிப்பளிக்கப்பட்டன. மேற்படி சுற்றறிக்கையின் 6.5. ஆம் பந்தியின் படி இயலளவு கட்டியெழுப்புதல் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு திறன் அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.	இணங்கப்பட்டது		
20	**கணக்காய்வு பந்திகளிற்கு பதிலளித்தல்**			
20.1	முன்னைய ஆண்டுகளிற்கான கணக்காய்வு அறிக்கைகளில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் திருத்தப்பட்டுள்ளமை	இணங்கப்பட்டது		

*** நிறைவு ***